# தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

கிழமை இதழ்

தொகுதி 1 | தி. பி. 2013 துலை 28 (14 - 11 - 1982) விலை 65 காசு | இதழ் எண் : 2 | பகுதி 2


## ★ சமசுக்கிருதம் ஒரு 'பேய்' மொழி !

## ★ உலக மாந்த இனம் வேறுபட்டுக் கிடப்பதற்கு சமசுக்கிருதமும் பார்ப்பனர்களுமே காரணம் !

- பன்மொழிப் புலவர். அப்பாத்துரையார்

## ★ தமிழினம் தன்னை அனைத்துப் பிளவுகளிலிருந்தும் மீட்டுக் கொண்டாலொழிய, முன்னேறுவது கடினம் !

- பாவலரேறு பெருஞ்சித்திரனார்

# 'தமிழ் நிலம்' வெளியீட்டு விழாவில் தலைவர்கள் உரை !

சென்னை, நவம்பர் — 7.

உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின் செய்தி இதழாகிய "தமிழ் நிலம்" கிழமை இதழ் (Weekly) வெளியீட்டு விழா, 7.11.82 ஞாயிறு 4 மணியளவில், சென்னை தேவநேயப்பாவாணர் மாவட்ட நடுவண் நூலகக் கட்டிடத்தில் மிகச் சீரும், சிறப்பாகவும் நடைபெற்றது.

பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையார் தலைமையில், ஆட்சிமொழிக் காவலர் கீ. இராமலிங்கனார், பேரா. கு. வெ. கி. ஆசான், வள்ளுவன், விடுதலைப்புலி முகுந்தன் மற்றும் அறிஞர் பலர் விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர். பாவலரேறு அவர்கள் கொள்கைப் பேருரை நிகழ்த்தினார்.

(செய்திச் சுருக்கம் வருமாறு.)

விழாவுக்கு வந்திருந்த பொது மக்களுக்கு, பெருத்த நம்பிக்கையையும், உணர்வையும் இவ்விழா ஏற்படுத்தியது.

வெளியீட்டு விழா, குறிப்பிட்ட நேரத்தில், சரியாக 4-00 மணி அளவில் இசைப் புலவர் திரு. மயிலம் வச்சிர வேலனாரின் குமரிக்கண்ட வாழ்த்துடன் தொடங்கியது. அடுத்து, செல்வி. மா. செந்தாழை (அறி.மு.) அவர்கள் தமிழ் வாழ்த்துப் பாடினார்.

விழாத் தலைவர் திரவிட மொழிக் கதிரவன், பன் மொழிப்புலவர். கா. அப்பாத் துரையார், ஆட்சிமொழிக் காவலர். கி. இராமலிங்கனார் பாவலரேறு. பெருஞ்சித்திரனார், பேராசியரியர். கு. வெ. கி. ஆசான் பேரா. ஆறு. அழகப்பனார் மற்றும் அறிஞர் பலர் அரங்கமேடையில் அணி வகுத்து அமர்ந்திருந்தனர்.

உ. த. மு. க. அமைப்புச் செயலர் தென்மொழி. ப. துரையரசன் க.இ. அவர்கள், தலைவரை முன்மொழிந்து உரையாற்றினார். புதுவை மாநில உ. த. மு. க. அமைப்பாளர் வழக்கறிஞர். ப. அருளி அவர்கள் வழிமொழிந்தார்.

உ. த. மு. க. தலைமைக்குழு உறுப்பினர் தென்மொழி ந. முத்துக்குமரன் அறி. இ. அவர்கள், விழாவில் பங்கேற்றுச் சிறப்பிக்க வந்த அறிஞர்கள், கருத்து மழையில் நனைய வந்த தமிழன்பர்கள், உணர்வுரையைக் கேட்க வந்த பொது மக்கள், ஆகிய அனைவரையும் மகிழ்ச்சி பொங்க வரவேற்றார்.

பின்னர், விழாத் தலைவர், திரவிடமொழிக் கதிரவன், பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையார் க.மு. அவர்கள், தலைமையுரை ஆற்றினார்.

'உலகில் மிகப்பெரிய பழைய மொழி தமிழ், ஆரியர்கள் மதத்தையும் சமசுகிருத மொழியையும் வைத்துக் கொண்டு அதனைப் பெரிதும் நிலைகுலையச் செய்து விட்டார்கள்; சமசுகிருத மொழி ஒரு பேய் மொழி; 'சாத்தான்' மொழி : தமிழ் தன்னை மீட்டுக் கொள்ள தமிழர்கள் அனைத்து வரலாற்று உண்மைகளையும் உணர வேண்டும்" என்றவாறான அரியதோர் கருத்தும் அறிவும் செறிந்த உரையாற்றி, அவையினரைச் சிந்தனையில் மூழ்க வைத்தார். (முழுச் சொற்பொழிவும் பின்னர் வெளிவரும்.)

'தமிழ் நிலம்' இதழைப் பெற்று ஏற்புரை வழங்க இசைவு தெரிவித்து விட்டு, விழாவில்,— குறிப்பிட்டபடி கலந்துகொள்ள வராது தவறிய மாண்புமிகு. பர். கா. காளிமுத்துவுக்குப் பகரமாக (பதிலாக), இதழை வெளியிடுவதற்காக வந்திருந்த ஆட்சிமொழிக் காவலர் கீ. இராமலிங்கனார் அவர்களே, அந்தப் பொறுப்பை ஏற்றார். விழாத் தலைவர் பன்மொழிப் புலவர் அவர்கள் வெளியிட்டு அளித்த முதல் இதழை ஆட்சிமொழிக் காவலர் நெஞ்சுவந்து ஏற்று, அரியதோர் ஏற்புரை வழங்கினார். (முழுச் சொற்பொழிவும் பின்னர் வெளிவரும்.)

அடுத்து, சோமனார். வழக்கறிஞர். திரு. பத்மநாபன் அவர்கள், சார்புரை செய்து வாழ்த்துரைத்தார். அவரை அடுத்து, உ. த. மு. க. கோவை மாவட்ட அமைப்பாளர் பேரா. கு. வெ. கி. ஆசான் க.மு., ச. இ. அவர்கள், வரலாற்றுச் செய்திகளும் தமிழின எழுச்சியின் தேவைகளும் பற்றிய அரியதோர் கருத்துரையை உணர்வு பொங்க ஆற்றினார். அவரையடுத்து, புலவர். திரு. இறைக் குருவனார் உரையாற்றினார்.

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகப் பொதுச் செயலாளர், விடுதலைப் புலி 'முகுந்தன்' என்றழைக்கப் பெறும் உமா மகேசுவரன் அவர்கள், அரங்கமேடைக்குச் சென்றார். வாயிலிலிருந்து, அவர் அரங்கில் ஏறும் வரையிலும் தமிழ்ப் பெருமக்களின் கைத் தட்டல் ஒலி நீண்ட நேரம்

(4-ஆம் பக்கம் பார்க்க)

மொழி, குமுகாயம், அரசியல், பொருளியல், கலை, அறிவியல், பண்பாடு ஆகிய ஏழு துறைகளிலும் உலகத் தமிழினத்தை மேம்பாடுறச் செய்யும் ஓர் உண்மை உழைப்பியக்கம், உ. த. மு. க.

★ வட்டார வெறியைத் தூண்டுவதற்கான காரணத்தை உருவாக்குவதே நடுவணரசுதான்!

★ மொழி, இன, நாட்டுக் கோரிக்கைகளை வேண்டுமென்றே வெறி என்று கூறி வடநாட்டு அமைச்சர்கள் புறக்கணிக்கிறார்கள்!

★ உண்மையில் நடுவணரசு, மாநிலப் பொருளியல் வளர்ச்சிக்கும், பண்பாட்டு வளர்ச்சிக்கும் துணையாயிருப்பதில்லை!

★ **உ. த. மு. க. வட்டார வெறிகளைத் தூண்டும் கட்சியில்லை; வட்டார நலனில் வளர்ச்சியில் அக்கறை கொண்ட கட்சியே!**

# ★ பாவலரேறு நேருரை! ★

(நம் சிறப்புச் செய்தியாளர்)

சென்னை, நவ. 10—

'அண்மையில் வடநாட்டு அமைச்சர்கள் சிலரும், அண்மையில் ஆந்திராவுக்குத் தேர்தல் கூட்டங்களில் பேசுவதற்கு வந்து போன இந்திரா காந்தியும், மொழி, இனம், மதம், சாதி இவற்றின் பெயரால் புதியனவாகப் பல கட்சிகள் தோன்றி, வட்டார வெறிகளை மக்களிடையில் பரப்பி வருவதாகக் கண்டனம் தெரிவித்து உள்ளார்களே. அது பற்றி உங்கள் கருத்தென்ன என்று, உலகத்தமிழின முன்னேற்றக் கழகமுதல்வர் **பாவலரேறு பெருஞ்சித்திரனார்** அவர்களிடம் நம் சிறப்புச் செய்தியாளர் கேட்டார். அதற்குப் பாவலரேறு அவர்கள் கூறிய விடையாவது.

''நடுவண் அரசு அமைச்சர்கள் சிலரும், தலைமை அமைச்சர் இந்திரா காந்தியும்; அடிக்கடி இப்படிக் கூறிவருவது, தாங்கள் அரசுத் தொடர்பான பொருளியல், தொழில் வளர்ச்சி, ஏழ்மை ஒழிப்பு முதலிய திட்டங்களில் தோல்வியடைந்து வருவதன் எதிரொலியே! மக்களை-குறிப்பாக அனைத்து மாநில மக்களையும் - நடுவணரசின் கொள்கையற்ற போக்கை, செயல்பாடற்ற திட்டங்களைக் கண்டுகொள்ளாமலிருக்கச் செய்வதற்காக அவர்களைத் திசை திருப்பும் பேச்சுகளே இவை.

மாநிலங்களின் மொழி, இனம், நாடு இவை மேம்பாடுறுவதற்கான முயற்சிகளையும், கோரிக்கைகளையும் நடுவணரசு புறக்கணிப்பதாலேயே, அவை தொடர்பான போராட்டங்களும், கிளர்ச்சிகளும் தோன்றுகின்றன. அவற்றுக்கான அடிப்படைக் காரணங்களைக் கண்டறியாமல், வெறுமனே அவற்றை வெறி என்று கூறி முறியடிக்கப் பார்க்கிறது நடுவணரசு! இது மிகவும் கொடுமையானது. நாட்டின் அனைத்து அதிகாரங்களையும் தன் கையில் வைத்துக் கொண்டிருக்கும் நடுவண் அரசு, அவற்றை மாநில, வட்டார வளர்ச்சிகளின் பொருட்டுப் பயன்படுத்துவதில்லை. மாறாக மாநிலங்களையும் அவற்றின் தனித்தன்மை வாய்ந்த மொழி, கலை, இலக்கியம், பண்பாடு முதலியவற்றை அழிப்பதற்கும், தேசியம் என்னும் பெயரால் ஓர் ஒட்டு மொத்தமான ஆரியச் சார்பு நிலைகளைப் பரப்பி, இந்த நாட்டை ஆரிய நாடாக்குவதற்குமே முயற்சி செய்து வருகிறது.

இக்கொடுமையான போக்கைத் தடுத்து நிறுத்துபவர்களையும், அப்படி நிறுத்தப் பாடுபடும் கட்சிகளையும் இயக்கங்களையும் வட்டார வெறிகொண்டவர்கள் என்றும், பிரிவினைக் கட்சிகள், இயக்கங்கள் என்றும் கூறி, அவர்களின் முறையான கோரிக்கைகளையும், நேர்மையான முயற்சிகளையும் முறியடிக்கப் பார்க்கின்றது. இவை ஓர் இனம் வளர, அதை வாழ்விக்க மற்ற இன மரபுகளை அழித்தொழிக்கும் முயற்சியே!

வட்டார வெறியைத் தூண்டுவதற்கான காரணத்தை உருவாக்குவதே நடுவணரசுதான்! மொழி, இன, நாட்டுக் கோரிக்கைகளை வேண்டுமென்றே வெறி என்று கூறி வடநாட்டு அமைச்சர்கள் புறக்கணிக்கிறார்கள். உண்மையில் நடுவணரசு, மாநிலப் பொருளியல் தொழில் வளர்ச்சிக்கும், பண்பாட்டு, மொழி வளர்ச்சிக்கும் துணையாயிருப்பதில்லை.

உதக மண்டலத்தில் அமைக்கப்படவிருந்த வண்ணப்படச்சுருள் தொழிற்சாலைத் திட்டம் வடநாட்டுக்கு (உத்திரப்பிரதேசத்திற்கு) மாற்றப்பட்டதும், காவிரி நீர்த் தொடர்பாகத் தமிழ் நாட்டிற்கும் கருநாடகத்திற்கும் தொடர்ந்து இருந்து வரும் சிக்கலில் ஓர் உடன்படிக்கை ஏற்பட முயற்சி செய்யாமல் இருப்பதும் — நடுவணரசின் அக்கறையற்ற போக்கை நன்கு உறுதிப்படுத்திக் காட்டுவதற்குப் போதுமான சான்றுகளாகும்.

இன்னும், பெரம்பூர் தொடர் வண்டிப் பெட்டித் தொழிற்சாலையின் விரிவு இங்கு முடப்படுத்தப்பட்டு இதனை இன்னும் பெரிய திட்டமாக ஆக்கி, வடநாட்டில் (அரியானாவில்) அதைச் செயலாக்க முனையும் நடுவணரசின் கரவான முயற்சிகளை எப்படி வரவேற்பது!

தேசியம் என்று வெறும் வாயளவில் பேசி, அவ்வம் மாநிலங்களுக்கு நேர்மையாக ஏற்படுத்த வேண்டிய வளர்ச்சி வாய்ப்புகளைக் குறைப்பது, நடுவணரசு செய்யும் கொடுமையான போக்காகும். இதைத் தடுத்து நிறுத்தியாக வேண்டும். இது போன்ற முயற்சிகளில் எதிர்காலத்தில் புதிதாகத் தோன்றியுள்ள எங்கள் உலகத் தமிழின முன்னேற்றக் கழகம் பாடுபடும்; தேவையானால் போராடும்'' என்று பாவலரேறு கூறினார்கள்.

'உங்கள் உ. த. மு. க. வட்டார வெறிகளைத் தூண்டும் கட்சி என்று சிலர் குறை கூறுகின்றனரே அதற்கென்ன சொல்கிறீர்கள்' என்று பாவலரேறு அவர்களிடம் கேட்கப்பட்டது.

அதற்கு, அவர், 'எங்களுக்குத் தேவையான உரிமை நலன்களைப் பற்றிப் பேசுவதும், அதற்காகப் போராடுவதும் வட்டார வெறியாகாது. நாட்டின் வளங்களையும் நலன்களையும் பரவலாக்க வேண்டும் என்று கூறுவது தவறாகாது.

அதுபோல் தமிழ் மொழிக்கு நேர்ந்த, நேர்ந்து வருகின்ற தாக்கங்களைத் தடுத்து நிறுத்தப் பாடுபடுவதும், தமிழ் இனத்துக்கு ஏற்பட்ட இழிவுகளையும் தாழ்வுகளையும் தவிர்க்க முயற்சி செய்வதும் மொழி வெறியோ, இன வெறியோ ஆகாது.

ஒரு மொழியின் அது தழுவிய இனத்தின் வளர்ச்சிக்குரிய முயற்சிகளே வெறியென்றால், அவற்றின் மேல் திட்டமிட்டுத் தாக்கப் பெறும் முயற்சிகளை என்னென்பது?

'உ. த. மு. க. வட்டார வெறிகளைத் தூண்டும் கட்சியில்லை; வட்டார நலன்களில், அவற்றின் வளர்ச்சியில் அக்கறை கொண்ட கட்சியே' என்று அழுத்தந் திருத்தமாகக் கூறினார். ★

---

## இலங்கையிலிருந்து வெளிவரும் கூட்டணி இதழ் "சுதந்திரன்" ஏட்டுக்குத் தடை?

நவம்பர், 2—

இலங்கையில் கடந்த கிழமை (20-10-82) சிறிலங்கா அரசுக்கான புதிய தலைவர் தேர்தல் நடைபெற்றது. இத்தேர்தலில் செ. ஆர். செயவர்த்தன 52.9% ஒப்போலைகளைப் பெற்று மீண்டும் தலைவரானார். இதன் விளைவு, கடந்த 25 ஆண்டுகளாக தமிழீழ மக்களின் உரிமைக் குரலாக வெளிவந்து கொண்டிருந்த ''சுதந்திரன்'' இதழ் தடை செய்யப்பட்டுள்ளதாக அறிகின்றோம். தந்தை செல்வாவினால் தொடங்கப் பெற்ற இவ்வேட்டின் ஆசிரியராக கோவை மகேசனும், அதன் உரிமையாளராக சந்திரகாசன் அவர்களும் இருந்து வருகின்றனர்.

'சுதந்திரன்', விடுதலைக் கொள்கையை முன் வைத்ததுடன், இலங்கை அரசை மிக வன்மையாகக் கண்டித்தும் வந்தது. கடந்த தலைவர் (President) தேர்தலில் செயவர்த்தனவுக் கெதிராகவும் தேர்தலைப் புறக்கணிக்கும்படியும் செய்தி வெளியிட்டதுடன், தமிழர் விடுதலைக் கூட்டணியின் (TULF) இன்றைய அரசியல் நிலைப்பாட்டை மிக வன்மையாகக் கண்டித்தும் வந்தது.

'சுதந்திரனை'த் தடை செய்ததனால், தமிழீழ மக்களின் இன்னுரிமை மீதான சிங்கள ஒடுக்கு முறையை உலகத் தமிழர்கள் அனைவரும் அறியும் வாய்ப்பைத் தடை பண்ணியுள்ளது. சுதந்திரன் ஏட்டைத் தடை பண்ணியதன் மூலம், தமிழீழ விடுதலையை நசுக்கி விடலாம் எனக் கற்பனை செய்யும் இலங்கையின் மேலாண்மை ஆட்சியைக் கண்டிக்கின்றோம்.

—நம் இலங்கைச் செய்தியாளர்

---


## தமிழ் நிலம்

உ. த. மு க. செய்தியிதழ்
கிழமை வெளியீடு (Weekly)
சிறப்பாசிரியர்:
**பாவலரேறு பெருஞ்சித்திரனார்**

0 இஃது ஓர் உ. த. மு. க. வெளியீடு
0 சென்னையில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் வெளியூர்களில் ஒவ்வொரு காரி(சனி)க் கிழமையும் கிடைக்கும்.

ஒவ்வோரிதழிலும்...

0 உ. த. மு. க. செய்திகள்:
0 அரிய வரலாற்றுப் பொருளியல் கட்டுரைகள்:
0 மொழி, இன ஆராய்ச்சிக் கட்டுரைகள்:
0 இன, நாட்டு விடுதலை வரலாறுகள்:
0 கலை, இலக்கியச் செய்திகள், கதைகள்!
0 சூடான நடைமுறை அரசியல் திறனாய்வுகள்:
0 பிற சிறப்புச் செய்திகள்:
... அனைத்தும் இடம் பெறும்!

0 இதழின் அளவு ⅛ டெம்மி, (16½"×11½")
0 விலை விளக்கம்:

| | |
|---|---|
| தனியிதழ் | 0.65 காசு |
| ஆறு மாதக் கட்டணம் (26 கிழமைகள்) | 18.00 உருபா |
| ஓர் ஆண்டுக் கட்டணம் (52 கிழமைகள்) | 36.00 உருபா |

ஐந்தாண்டுக் கட்டணம்: 175.00 உருபா

ஓரிதழ்க்கு 4 உருபா முன் பணம் கட்டக்கூடிய முகவர்கள் எழுதிக் கேட்க!

அல்லது ஓரிதழ்க்கு 50 காசு மேனிக் கணக்கிட்டு, 20 படிகளுக்கும் அதற்கு மேலும், எத்தனைப் படிகள் வேண்டுமாயினும், அப் படிகளுக்குரிய தொகையை முன் பணமாக விடுத்து இதழ்களைப் பெற்றுக் கொள்க.

அமைச்சர்
**தமிழ் நிலம்**
5, அருணாசலத் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை—5

சொல்லின் பொருளைத் தெரிந்துகொள்ளுங்கள் !

## வெள்ளரிக்காய்

(Eng: Cucumber Bot: Cucumis Sativus)

வெள்வரி

கோடைக் காலத்தில் பரவலாகக் கிடைக்கும், குளிர்ச்சியான நறுக்குப் பதமான வெள்ளரிப் பிஞ்சையும், சருக்கரை மாப் போலும் இனிய சுவையை யுடைய வெள்ளரிப் பழத்தையும் நாம் அறிவோம் ! இந்த வெள்ளரியின் முந்திய வடிவம் எது ?

**வெள்வரிக்காய், வெள்வரிப் பழம்** என்ற பழம் பெயர்களின் மரூஉப் பெயர்களே இன்று நாம் வழங்கும் வெள்ளரிக் காய், வெள்ளரிப் பழம் என்பனவாகும்.

காயின் மேலும், பழத்தின் மேலும் வெண்மையான வரிக் கோடுகளை இயற்கையாகப் பெற்றிருக்கும் தோற்றம் காரணமாக, **வெள்வரி** என்ற பெயரால் சுட்டப் பெற்றுப், பின் வெள்வரி, வெள்ளரி என்றவாறு திரிபடைந்து இன்று வழங்கி வருகின்றது.

''வாள்வரிக் கொடுங்காய்'' (சிலம்பு: கொலைக் களக் காதை: 25). இதனை ''வால்வரிக் கொடுங்காய்'' எனப் பாடங்கொண்டு ''வெள்வரிக்காய்'' என்று பொருளெழுதுவார் அரும்பதவுரையாசிரியர். 'வாள்' என்னும் சொல்லுக்கு ஒளிப் பொருளும் வெண்மைப் பொருளும் உண்டு. ஒ. நோ : வாள் ஒளியாகும் (தொல் : உரியியல் ; 69).

புறநானூற்றுப் பாடலொன்றின் வரியில், ''அணில் வரிக் கொடுங்காய்'' (புறம் : 246 : 4) என்றவாறு விளங்கிய ஆட்சியும் காணப் பெறுகின்றது. அதற்குரிய பழைய உரையாவது : ''அணிலினது வரிப்போலும் வரியையுடைய வளைந்த வெள்ளரிக்காய்.''

— ப. அருளி

## கட்டாயக் கல்வி முறையைக் கொண்டுவர அரசைத் தூண்டுங்கள் !

தமிழ்நாட்டுச் சிறார்கள் தம் பத்தாவது அகவை (வயது) நிறையும் முன்னமேயே, வீட்டை விட்டு வெளியேறி வெளி மாநிலங்களில் பல இடங்களில் கடைகளிலும் வீடுகளிலும் எடுபிடிகளாகவும் கூலிகளாகவும் வேலைசெய்து கொண்டு அல்லல் உறுகின்றனர். இதே அந்தமானில்கூட, நான் பார்க்கும் குழந்தைகளில் பெரும்பாலான தமிழ்க் குழந்தைகள் இதுபோலவே துயருறுகின்றனர் ! வேற்று இனக் குழந்தைகள் இந்த அகவையில் இதுபோன்ற பணிகளில் ஈடுபடுவது, நம்மினத்துக் குழந்தைகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது மிக மிகக் குறைவானதேயாகும் !

இதேநிலை நீடித்துக் கொண்டே போகுமானால், வருங்காலத் தமிழ்நாடு இருள் நிறைந்ததாகி விடும். நம்மினத்தை உய்விப்பதும் மிகக் கடுமையானதாகப் போய்விடும் ! எப்பாடு பட்டேனும் முதல் வேலையாகத் தமிழ் நாட்டில் கல்வியைப் பரப்புவதற்கு உடனடியான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டாக வேண்டும் கட்டாயக் கல்விமுறை ஒன்றின் மூலம் மட்டுமே, இது முழுக்க நிறைவேற்றப்பட முடியும். எனவே வரும் கல்வி ஆண்டிலாவது கட்டாயக் கல்வி முறையை தமிழ் நாட்டில் கொண்டு வருவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய அரசைத் தூண்ட வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கின்றேன்.

—அறிவின்பன், போர்ட்பிளேயர்.

### உங்கள் ஊரில் ''தமிழ் நிலம்''

உங்கள் ஊரில் 'தமிழ் நிலம்' கிடைக்கவில்லையா? அது கிடைக்கும்படி நீங்கள் ஏன் முயற்சி செய்யக் கூடாது? உங்கள் ஊர் செய்தித் தாள் விற்பனையாளரிடம் அதை வரவழைக்கச் செய்யுங்கள். இல்லையானால் நீங்களே வரவழைத்து அன்பர்களுக்குத் தரலாமே ! 10 உருபாய் அனுப்புங்கள். இருபது படிகளை (Copies) அனுப்புகிறோம். ஒன்று 65 காசுக்கு விற்று மிகுதிக் காசை உங்கள் செலவுகளுக்கு ஈடு கட்டிக் கொள்ளுங்கள்! அதுபற்றி இன்றே எண்ணிப் பாருங்கள்.

தொடர் : 2

## தமிழீழ விடுதலை வரலாறு

முகுந்தன்

காலம் காலமாக-வரலாற்றுக் காலமுதல் இன்று வரை தமிழ் அரசர்களும், தலைவர்களும் உறுதிமொழிகளையும் ஒப்பந்தங்களையும் நம்பி ஏமாறினரேயன்றி வென்றனர் இலர். கோழைத்தனத்தை மறைப்பதற்கு ஏற்படுத்தும் ஒப்பந்தங்களையும்-உடன்பாடுகளையும் கொண்டு நாட்டையே மீட்டு விட்டதாக இக்காலத்தில் கூப்பாடு போடும் தலைவர்களைப் பார்க்கின்றோம். கோழைத்தனத்தின் மறு பெயர் தான் ஒப்பந்தங்கள், உரையாடல்கள் என்பதற்கு போர்த்துக்கேய தளபதி-சங்கிலியன் ஒப்பந்தம் எடுத்துக்காட்டாக அமைந்தது. ஆனால் வரையறையை மீறிய போர்த்துக்கேயரை மீண்டும் புறமுதுகிட வைத்தான், தமிழீழ மன்னன் சங்கிலியன்.

சங்கிலி மன்னனின் வலிமையையும் நாட்டுப்பற்றையும் நேரில் பார்த்து விட்ட ஒலிவேரா, நேரடிப் போரைத் தவிர்த்து சூழ்ச்சி செய்து நாட்டைப் பிடிக்க முடிவு கட்டினான்.

### வீடணத்தமிழர்

இராவணன் காலந்தொட்டு இன்று வரை தமிழினத்தைக் காட்டிக் கொடுக்கத் தமிழன் ஒருவன் தமிழ் மண்ணிலேயே தோன்றிக்கொண்டு வந்துள்ளான். இலங்கைத் தமிழ் மன்னன் இராவணனை அழிக்க அவன் தம்பி வீடணன் இராமனுக்குத் துணை நின்றான். வீரபாண்டிய கட்டப்பொம்மனுக்கு அதே மண்ணில் ஓர் எட்டப்பன் தோன்றினான். தமிழீழ மன்னன் சங்கிலியனைக் காட்டிக் கொடுக்க, தமிழீழ மண்ணில் பிறந்த ஒரு காக்கை வன்னியனைத் தேடிப் பிடித்தனர், போர்த்துக்கேயர். போர்த்துக்கேயருடன் சேர்ந்து தமிழீழ நிலத்தை அயலவர்க்கு அடிமைப்படுத்தத் திட்டம் வகுத்தான் காக்கை வன்னியன். இரவோடு இரவாகத் தனது சிறிய படையுடன் தமிழீழ மன்னனிடம் தஞ்சம் புகுவதாக ஏமாற்றத், திட்டம் வகுக்கப்பட்டது. தான் செய்த தவற்றை உணர்ந்து அயலவரை விரட்டி அடிக்க மன்னனுக்குத் துணை நிற்பதாகவும் கூறிச் சங்கிலி மன்னனின் காலில் மண்டியிட்டான். சூழ்ச்சியை அறியாத மன்னன் சங்கிலி, காக்கை வன்னியனைத் தன் இருகைகளாலும் ஆரக்கட்டித் தழுவினான். இவ்வேளை மன்னனது இடையில் வாள் இல்லையென்பதை அறிந்து தொண்ட காக்கை வன்னியனும்—மன்னனை இறுகக் கட்டித் தழுவினான். வாய்ப்பை எதிர்பார்த்திருந்த போர்த்துக்கேயப் படை வீரர் தமிழீழ மன்னன் சங்கிலியனைத் தளைப்படுத்தினர்.

தளைப்படுத்தப்பட்ட செய்தி தமிழ் ஈழத்தில் பரவும்முன் போர்த்துக்கேயரினால் சங்கிலி மன்னன் கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டான். முதன் முதலில் தமிழீழ நிலம் அயலவர்க்கு அடிமையானது. போர்த்துக்கேயர் கைப்பற்றிய தமிழீழத்தை மீட்டெடுக்கச் சிங்கள மன்னர்கள்—எவருமே முயலவில்லை. அவர்கள் அயல் நாட்டுப் போர் என்ற காரணத்தால் வாளாவிருந்தனர்.

(தொடரும்...)

உ. த. மு. க. விரிவடைகிறது !

## உலகத் தமிழின முன்னேற்றக் கழகம்

(தலைமையகம்)

### பொறுப்பு அமர்த்த அறிக்கை - 5.

உலகத்தமிழின முன்னேற்றக் கழகத்தின் பொறுப்பாளர்களாகக் கீழ்க் காணும் அன்பர்கள், கொடுக்கப்பெற்றுள்ள பதவிப் பொறுப்புகளில் 10-11-82 முதல், கழகச் சட்ட நெறி முறைகட்குட்படும் பதவியாண்டுக் காலத்திற்குப் பதவிப் பொறுப்புகளில் அமர்த்தப் பெற்றுள்ளனர்.

தலைமையகம், சென்னை-5, 10-11-82

பெருஞ்சித்திரனார்
கழக முதல்வர்

**(அ) இராமநாதபுரம் மாவட்டம் (கிழக்கு)**

(1) சிவகங்கை மாவட்டம்

தலைவர் : புலவர். இரா. வில்லாளன், சிவகங்கை. (செயலர், பொருளர் முன்னரே அமர்த்தப் பெற்றுள்ளனர்.)

(2) இராமேசுவரம் வட்டம்

தலைவர் : இரா. வளவன் (கணேசன்) தங்கச்சி மடம். செயலர்: நா. பூங்குன்றன் (பழனி வேல்சாமி) தங்கச்சி மடம். (பொருளர் ஆய்வில்)

**(ஆ) தென் ஆர்க்காடு (வடக்கு) மாவட்டம்.**

(1) பண்ணுருட்டி வட்டம் :

செயலர்: நட. இராசேந்திரன், புதுப்பேட்டை. பொருளர்:கோ. தேவநாதன் க.மு., பண்ருட்டி. (தலைவர் முன்னரே அமர்த்தப்பெற்றுள்ளார்)

(2) திருக்கோயிலூர் நகரம் - வட்டம்

தலைவர் : இர. இராமலிங்கம், திருக்கோயிலூர். செயலர் : மாயிறைவன் (மகாலிங்கம்) திருக்கோயிலூர். பொருளர். வரத. உளவழகன் (மனோகரன்) திருக்கோயிலூர்.

(3) திண்டிவனம் வட்டம்

தலைவர் : ச. பார்த்தசாரதி, திண்டிவனம். (செயலர் முன்னரே அமர்த்தப் பெற்றுள்ளார்; பொருளர் ஆய்வில்).

**(இ) திருச்சி மாவட்டம்:**

(1) உடையார் பாளையம் வட்டம்

செயலர். சா. தங்கராசு க.மு., (தலைவர் பொருளர் ஆய்வில்)

(2) குளித்தலை வட்டம்

பொருளர்: பெரி. வளவன் பேட்டை வாய்த்தலை. தலைவர்: (முன்னரே அமர்த்தப் பெற்றுள்ளார் செயலர் ஆய்வில்.)

(3) திருச்சி வட்டம்

செயலர்: தமிழநம்பி (இரா. கோபால கிருட்டிணன்) அறி.இ. அம்மன் குடி. (தலைவர், பொருளர் முன்னரே அமர்த்தப் பெற்றுள்ளனர்.

**(ஈ) தென்சென்னை மாவட்டம்:**

மாவட்ட அமைப்பாளர்: மருத்துவர். கோ. கோவிந்தனார், சென்னை-33. மாவட்டச் செயலர். சோ. ஆற்றலரசு, சென்னை-5. மாவட்டப் பொருளர்: செ. கண்ணன் க. இ., சென்னை-5. (பொறுப்பு அமர்த்தம் அறிக்கை எண் 1-இல் வெளியிடப் பெற்ற சென்னை மாநகர அமைப்பும், திருவல்லிக்கேணி வட்டப் பொருளர் செ. கண்ணன் அமர்த்தமும் தவிர்க்கப்பட்டன.)

(1) மயிலை வட்டம் ;

செயலர் : சே, பொற்கைப் பாண்டியன், ஆழ்வார்ப் பேட்டை. (தலைவர், பொருளர் ஆய்வில்)

(6-ஆம் பக்கம் பார்க்க)

ஓய்ந்திடல் இல்லை,என் உள்ளமும்
உணர்வும் உயிர்ச்செறிவும்!
தேய்ந்திடல் இல்லை,என் விரல்களும்
தாளும்! திரிந்தலைந்து
சாய்ந்திடல் இல்லை,என் உடலும்;
எனவே சலிப்பிலனாய்
மாய்ந்திடல் வரையும் உழைப்பேன்,
உரைப்பேன், மக்களுக்கே!


# தமிழ் நிலம்

உலகத் தமிழினமுன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தொகுதி 1 | 14-11-82—இதழ் எண்: 2 | பகுதி 2


## தொலைக்காட்சியில் இந்தித் திணிப்பு நீங்கிவிடவில்லை

தொலைக் காட்சியில் இந்தித் திணிப்பை நீக்கிவிட்டோம் என்று நடுவண் அரசு கூறுவது ஒரு கண்துடைப்பே. இரவு 8-30 மணியிலிருந்து 10 மணி வரை, தொலைக் காட்சியில் நிகழ்ச்சிகள் நடந்து வந்தன. அவற்றில் 8-30 மணி முதல் 8-45 வரை இந்திச் செய்தி ஒளிபரப்பப் பெற்று வந்தது. இந்த 15 நிமையச் செய்தி மட்டுந்தான் இப்பொழுது நீக்கப்பட்டு உள்ளது. மற்ற எஞ்சிய நேர (8-45 முதல 10-00 மணி வரை உள்ள) நிகழ்ச்சிகள் இன்னும இந்தியில்தான் நடைபெறுகின்றன. இதை எப்படி இந்தித் திணிப்பு நீங்கிவிட்டது என்று சொல்ல முடியும்! இந்தி நிகழ்ச்சியின் இறுதி நேரத்தில் 15 நிமையத்திற்கு உள்ள ஆங்கிலச் செய்தியறிக்கையை மட்டும் தேசிய ஒளிபரப்புக்காக வைத்துக் கொண்டு, மீதமுள்ள ஒரு மணி நேர இந்தி நிகழ்ச்சி ஒளிபரப்பு அடியோடு நிறுத்தப்பட வேண்டும்.

தேசிய ஒளிபரப்பு என்று அந்த நேரத்தை ஒதுக்கினால் கூட அதில் வேறு மொழிகளின் நிகழ்ச்சிகள் காட்டப் பெறுதல் வேண்டும். அப்படி, ஏதோ ஓரிரு நிகழ்ச்சிகள் தாம் பிற மொழிகளின் ஒளிபரப்பாக உள்ளது. மற்றபடி பெரும்பாலும் இந்தி நிகழ்ச்சிகளுக்குத்தானே, அந்நேரம் முழுவதும் பயன்படுத்தப் பெறுகிறது. இந்த நிலையில் தென்னாட்டுத் தலைவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க, தொலைக் காட்சியில் இந்தித் திணிப்பு நீக்கப்பட்டு விட்டது என்பது ஓர் ஏமாற்றே! இந்த நிலை நீடிக்குமானால் தமிழகத்தில் தொடர்ந்து பல வகையான எதிர்ப்புகள் கிளம்பிக் கொண்டுதான் இருக்கும். பின்னர் அவற்றை எதிர்கொள்வது நடுவண் அரசுக்கு மிகக் கடினமாக இருக்கும் என்று எச்சரிக்க விரும்புகிறோம்!

(1-ஆம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்தது. பின்னர், முகுந்தன் அவர்கள், 'தமிழ் நிலம்' இதழ், உலகத்தில் அல்லல்படும் அனைத்துத் தமிழ் மக்களுக்கும் துணையாக இருந்து, அவர்களைக் காக்க அயராது பாடுபடும் என்றும், மற்ற இதழ்கள் போல வருவாயைக் குறிக்கோளாகக் கொள்ளாமல், கொள்கையை முன் வைத்துத் தொடங்கப் பெற்ற அரிய இதழை அனைவரும் வாங்கிப் படித்துப் பயன்பெற வேண்டும், என்றும் கூறினார். மற்ற தமிழுணர்வாளர்களையும் படிக்கத் தூண்டவேண்டும்'' என்றும் கேட்டுக் கொண்டார்.

அடுத்து, தமிழ் வடமொழி மற்றும் பிற இந்திய மொழிகளின் ஆராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநர் பர். ஆறு. அழகப்பனார் அரியதோர் கருத்துரையாற்றி 'தமிழ் நிலம்' இதழை வாழ்த்தி வரவேற்றார்.

வாழ்த்துரைகளுக்குப் பின்னர், 'தென்மொழி' 'தமிழ்ச்சிட்டு' ஆகிய இதழ்களின் ஆசிரியரும், 'தமிழ்நிலம்' இதழின் சிறப்பாசிரியரும், உலகத் தமிழின முன்னேற்றக்கழக முதல்வரும் ஆகிய பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் கொள்கை விளக்கப் பேருரை தொடங்கியது.

''தமிழினத்தை ஒன்றிணைக்க இன்று உள்ள ஒரே யோர் அரிய கருவி தமிழே'' என்றும்; தமிழினம் தன்னை அனைத்துக் கீழ்மைப் பிளவுகளிலிருந்தும் மீட்டுக் கொண்டாலொழிய, தன்னை முன்னேற்றிக் கொள்வது கடினம் என்றும், உரிமையுணர்வுள்ள இனமாக நாம் முதலில் ஆகவேண்டும் என்றும், 'தமிழ் நிலம்' மொழியையும் இனத்தையும் மீட்க அயராது தொடர்ந்து பாடுபடும் என்றும் விளக்கினார். உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின் ஏழு கொள்கைகளின் அடிப்படைகளையும் கூறுகூறாக விளக்கினார். (முழுச் சொற்பொழிவும் அடுத்து வெளிவரும்.)

தீவிரவுப் பொதுவுடைமைக் கொள்கையுணர்வாளர் திரு. வள்ளுவன் அவர்கள், விழாத் தொடக்கத்தினின்று இறுதி வரை அமர்ந்திருந்து விருப்புறக் கேட்டு மகிழ்ந்திருந்ததும், அரிய கருத்துரையாற்றியதும் குறிப்பிடத்தக்கதாகும்.

முடிவில், மா. பூங்குன்றன் அறி. இ., க. மு. அவர்கள் நன்றியுரையாற்றினார். சோ. ஆற்றலரசு. ப. முருகவேள் மா. பூங்குன்றன் ஆகியோர் தமிழர் ஒருங்கிணைப்புப் பாடலுடன், வெளியீட்டு விழா இனிதே நிறைவெய்தியது.

—சிறப்புச் செய்தியாளர்


# தமிழ் நிலம்

சிறப்பாசிரியர் :

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

பொறுப்பாசிரியர் குழு :

புலவர் இறைக்குருவனார், சென்னை-5., வினைவேந்தன், சென்னை-5.

உறுப்பாசிரியர் குழு :

1. 'தமிழம்' செம்பியன், சென்னை.
2. பாவலர். முல்லைவாணன், சிங்கை.
3. ந. முத்துக்குமரன், அறி. இ பல்லடம்.
4. இரா. ந. வீரப்பன், மலேசியா.
5. சொல்லாய்வறிஞர். ப. அருளி, வணி. இ. ச. இ., புதுவை.
6. சுப. சுப்பிரமணியம், அந்தமான்.
7. மா. பூங்குன்றன், க.மு. சென்னை.
8. ப. மணிச்சுடரன், மே. செருமானி.
9. அ. பு. திருமாலன், மலேசியா.

புரப்பாசிரியர் குழு :

1. மா. ஆறுமுகம், பல்லடம். 2. ப. துரையரசன், திருப்பூர். 3 சுப திருமாறன், நெய்வேலி 4. நாரா. மகிழ்நன், திருச்சி. 5. கோ உளங்கவரழகன், இராசிபுரம். 6 புலவர். கா. இளமுருகன் க.மு பு, புளியம்பட்டி. 7. நா இளமாறன், பவானி. 8 சோ. தமிழ்மகன், கோவை. 9. கு மேழிவளவன், அ பள்ளிப்பட்டி. 10. சு. ஆதன்றன், திருவள்ளூர் 11. புலவர். மு ஆறுமுகம், க மு, சாத்தனூர். 12. பர். பொ இளங்கோ, ஈரோடு 13 இரா. இளம்பிறைச்செல்வன், (பாலகங்காதரன்) பொறி இ திருச்சி 14 மருத்துவர் ஆ விசுவநாதன், சின்னசேலம். 15 த கரிகாலன், கடையநல்லூர் 16 பாவலர் சா சி. சுப்பையா, ஈப்போ, மலேசியா 17 ச இறைவாணன், சிங்கப்பூர் 18 பாவலர். முத்துப்பாண்டியன், பெராக் மலேசியா 19 அ தங்கராசன், ஈப்போ, மலேசியா 20. க. சச்சிதானந்தன், தென்னேமன், ஏடன்.

கட்டுரையாசிரியர் குழு :

1. பன்மொழிப் புலவர். கா. அப்பாத்துரையார், க. மு. சென்னை.
2. பேரா. கு.வெ.கி. ஆசான், க.மு. கோவை.
3. மெ. சிதம்பரனார், துணையாசிரியர், 'தமிழ்முரசு' சிங்கப்பூர்.
4. பண்டிதர். க. பொ. இரத்தினம், இலங்கை.
5. சிந்தனைச்செம்மல். கு. ச. ஆனந்தன், வணி. இ. ச. இ., கோபி.
6. ஆட்சிமொழிக்காவலர். கீ. இராமலிங்கனார், க.மு. சென்னை.
7. பேரா. பர். க. ப. அறவாணன், சென்னை.
8. பேரா. இல. சு. இரத்தினவேலு. மதுரை.
9. ப. பத்மநாபன், க. மு. ச. இ. சோமனூர்.
10. புலவர். ச. சிவசங்கு, ஏரல்.
11. மருத்துவர். கோ. கோவிந்தனார், சென்னை.
12. புலவர். தி. நா. அறிவுஒளி, க. மு., திருக்கழுக்குன்றம்.
13. பேரா. ம. அரங்கசாமி, கோபிசெட்டிபாளையம்.
14. பர். தாயம்மாள் அறவாணன்., சென்கல்.
15. பேரா. சதாசிவம், க. மு., ஈரோடு.
16. புலவர். பொதிகைச்செல்வன் க. மு.
17. அறிஞர். குணா, வெங்காலூர்,
18. கோ. மு. பெருமாள், அறி. இ. சென்னை.
19. சி. அரசிறைவன், அறி. இ., தஞ்சாவூர்.
20. செம்பியன் வல்லத்தரசு, சென்னை.
21. பாவலர். பெ. மணிவேலன் க. மு., அரூர்.
22. அ. தெ. தமிழநம்பி, விழுப்புரம்.
23. க. குழந்தைவேலன், க.மு. சென்னை.
24. பாவலர். கடலூர். மணிமாறன், க. மு. திருச்சி.
25. த. அன்பழகன், மஞ்சள் நீர் காயல்.
26. இரா. பாவாணன், புதுக்கோட்டை
27. தி. குமாரப்பன், க. மு. மதுரை.
28. பாவலர். ம. நிறைவாணன், வேலூர்.
29. இரணியன், க. மு. கோவை.
30. பர். ஆறிறைவன், சென்னை.
31. 'தமிழ்ச்சுடர்' மணிமுத்து, அறி. இ.. பழனி.
32. உமாமகேசுவரன் (முகுந்தன்) இலங்கை.
33. மருத்துவர் சோ. இராச்சுந்தரம், கொக்குவில், இலங்கை.
34. புலவர். நாவை-சிவம் மணப்பாறை

செய்தியாசிரியர் குழு :

1. புலவர். பொன். முகிலன், கூவலூர். 2. கி இளஞ்சேரல் முதுபாண்டியன், மின்பாறை 3, ச சின்னத்துரை, நெய்வேலி. 4 தென்னவனகோ, நெல்லை 5. ப. முருகவேள். சென்னை. 6. குமர. தன்னொளியன், பாகாயம். 7. மு. உலகமுதல்வன், திருவண்ணாமலை, 8 கோ. நக்கீரன், சோளிங்கபுரம். 9. ம. செ. தமிழ்மணி, நெமலி. 10. புலவர். ந. அ. அண்ணாமலை, ஆலங்காயம். 11. புலவர். இரா. தமிழ்வேந்தன், எழில், இறையூர். 12 புலவர். கு. அண்டிரன், சின்னச்சேலம். 13. பொற்செழியன், வெங்காலூர். 14. குழந்தை. ஈகவரசன், திருச்சி. 15. த. தமிழ்த்தென்றல், தஞ்சை. 16. மு.பழ. சதாசிவம், சேலம். 17. அரங்க. தமிழ்மணி, கோவை. 18. க. தமிழப்பன், திருப்பூர். 19. செ. வ. புகழேந்தி, கள்ளக்குறிச்சி. 20. பால். இறையொளியன், தாராபுரம். 21. வி. சே. வேல்நெறியன், வி. க வலசு 22. நிலா. வேங்கடவன், ஈரோடு 23. புலவர். இரா. சிவசண்முகம், முகவை. 24. தெ. சாலமகன்அரசு, விருதுநகர். 25. மு.பெ. பறம்பை அறிவன், பரமக்குடி. 26. சுல்லை. பெருஞ்சித்திரன், கல்லுப்பட்டி. 27. சங்க. தமிழ்ச்செல்வன், திருக்குறுங்குடி. 28. புலவர். ந.இரா. தமிழவேள், நரசீபுரம். 29. கோ. ப. சீரங்கசாமி, கோவை. 30. திரு. தாமரைக்கோ, க. இ. முத்தரையர் பாளையம். 31. இரா அறிவின்பன், அந்தமான். 32. நா. தமிழவேள், பழங்கரை. 33. திரு. விழுப்பரையன், விழுப்புரம். 34. சி தமிழ்க்குமரன், கீரமங்கலம் 35. புலவர். தே. வே. சந்தானம், அரூர் 36 துரைமடங்கன், கோவை 37 இரா கழராம்பன், திண்டுக்கல் 38 அ. தமிழன்பன், கடையநல்லூர். 39. மு. குமரிச்செல்வன், மணவாளக்குறிச்சி. 40. தா. மு தமிழ்ப்பித்தன், குமரி. 41. மு. சிதம்பரநாதன், உதகமண்டலம். 42 சா. தங்கராசு, குவாகம் 43 புலவர் ஆ. முகிலன், சிதம்பரம். 44 மெய் அருண்மொழியன், பெருவயல். 45. புலவர். ஆ பு. கலிங்கனார், தா. வாடிப்பட்டி. 46. அ. எழிலன்பன், கண்டராதித்தம் 47 புலவர் க தூக்கியு திருவடியார், உளுந்தூர்ப்பேட்டை. 48 அ. பெ. வளர்தமிழ் அறிவன், பேட்டை வாய்த்தலை. 49. புலவர். ந. தமிழவேள், க.மு. திருக்கோயிலூர், 50. வி. திருவள்ளுவன் இராசத்தான். 51. க மு குணசேகரன், இரங்கூன். 52. செல்லையா, கலிபோர்னியா. 53 சி. கோபாலக்கிருட்டிணன், சவுதிஅரேபியா. 54. சு. சுப்பிரமணியன், அபுதாபி. 55. முரு. குழ. வீரசிங்கம், இலண்டன், 56. நாரண திருவிடச்செல்வன், மலேசியா. 57 ஈழவேந்தன், கொழும்பு 58. தியாகேசுவரன், பிரான்சு 59. புட்பரதம், மொரிசியசு 60. எம். ஏ சுவாமி, மணிலா. 61. ந. சிவலிங்கம், கனடா. 62. சி. தியாகராசா, நார்த்விச் (U.S.A) 63. மு. சிரீராமலு, இந்தோனேசியா, 64 உமாகாந்தன், பாரிசு. 65. க. சின்னப்பன், டர்பன். 66. பாவலர். காசிதாசன், கோலாலம்பூர்.

விளம்பர ஆசிரியர் குழு :

1. சி. இமையவரம்பன், திருச்சி.
2. சோ. ஆற்றலரசு, சென்னை-5.
3. துரை-தென்னவன், சென்னை-19.
4. செ. கண்ணன், சென்னை-5.
5. சு. இளங்கோவன், திருச்சி.
6. அழ. இளமுருகன், சென்னை-5.
7. மா. பொழிலன், சென்னை-5.

ஓவிய ஆசிரியர் குழு :

1. ப. அறவாழி, உடுமலைப்பேட்டை, 2. வி. சின்னையன், சென்னை

# உ. த. மு. க. செய்திகள்

## நெல்லை மாவட்டம், கடையநல்லூர் உ. த. மு. க. கிளை தொடக்க விழா :

நெல்லை மாவட்டத்தின், கடையநல்லூரில் உ. த. மு. க.வின் கிளை தொடக்க விழா 25-9-82 காரியன்று, அவ்வூர் அரசினர் மகளிர் மேல்நிலைப் பள்ளியில் சிறப்புற நடந்தேறியது. மாவட்டப் பொருளர் திரு. பாண்டியன் வரவேற்புரை ஆற்றினார். மாவட்ட அமைப்பாளர் திரு. கு. கார்குழலன் அவர்கள் தலைமையேற்று நடத்தினார்.

பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களும், வழக்கறிஞர்களும், மருத்துவர்களும், அரசுத் துறை அதிகாரிகளும், தமிழாசிரியர்களும், இலக்கிய ஆர்வலர்களும் திரளாக வந்து கலந்து சிறப்பித்தனர்.

வழக்கறிஞர் பாண்டிய வளவன் பழனிச்சாமி, மாவட்டச் செயலர் தமிழன்பன் ஆகியோர் சிறந்த உரைகளை ஆற்றினர். பின்னர், உ. த. மு. க. வின் முதல்வர் பாவலரேறு ஐயா அவர்கள், நம் தமிழ்மொழியின் தோற்றம், வளர்ச்சி, மற்றும் அதன் தனித்தன்மை ஆகியவற்றை நிரலுற வரலாற்று விளக்கங் காட்டி, நாம் மீட்பெறுவதற்குச் செய்ய வேண்டிய கடமைகளைச் சுட்டி, உ. த. மு. க.வின் தேவையை வலியுறுத்தி நீண்ட அரியதோர் உரையாற்றினார். இறுதியில் தென்காசி வட்டச் செயலர் திரு. இப்பாராசு நன்றியுரையுடன் விழா இனிதே நிறைவுற்றது.

## திருச்சி மாவட்ட உ. த. மு. க. தொடக்க விழா

தி. ஆ. 2013 கன்னி, பத்தாம் பக்கல் (26-9-82) ஞாயிற்றுக்கிழமை யன்று திருச்சி மாவட்ட உ. த. மு. க. தொடக்க விழா, திருச்சி நகர மன்றத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

காலை நிகழ்ச்சியில், திரு. சி. இமயவரம்பன் வரவேற்புரையாற்றினார். பதினொரு மணியளவில், தமிழின முன்னேற்றத்தின் பெருந்தடை, குமுகாய ஏற்றத் தாழ்வா? அல்லது பொருளியல் ஏற்றத் தாழ்வா? என்னும் தலைப்பின் கீழ், அரிய பட்டி மன்ற நிகழ்ச்சி தொடங்கியது. கோவை மாவட்ட உ. த. மு. க. அமைப்பாளர் பேரா. கு. வெ. கி. ஆசான் க. மு., ச.இ. அவர்கள், பட்டிமன்ற நடுவராக அமர்ந்திருக்க, "குமுகாய ஏற்றத் தாழ்வே" என்னும் அணியின் கீழ், அதன் அணித் தலைவர் பேரா. வீரபாண்டியன் க. மு., பா. கு. அரசேந்திரன் க. மு., புலவர் கடலூர் திரு. மணிமாறன் க.மு. ஆகியோரும், 'பொருளியல் ஏற்றத் தாழ்வே' என்னும் அணியின் கீழ், அதன் அணித்தலைவர் பாவலர் திரு. கண்ணை, திரு. க. சிங்காரவேல் பொ. பொ. ம., திரு. பாண்டியன் கடுங்கோ அறி. இ., ஆகியோரும் அரிய கருத்துரைகளை நிகழ்த்தி அவையோரை மகிழ்வித்தனர். இறுதியில், பட்டி மன்ற நடுவர் பேரா. கு. வெ. கி. ஆசான் அவர்கள், "தமிழின முன்னேற்றத் திற்குப் பெருந்தடையாக இருப்பது குமுகாய ஏற்றத் தாழ்வே" எனத் தீர்ப்புரை வழங்கினார்கள். திரு. அழகு மதியான் நன்றி கூறினார்.

அடுத்து, மாலை நிகழ்ச்சி, 6-00 மணியளவில் திருச்சி மாவட்ட உ. த. மு. க. அமைப்பாளர் திரு. இரா. பாலசுந்தரனார் பொறி.இ. தலைமையில் தொடங்கியது. மாவட்டச் செயலர் திரு. நாரா. மகிழ்நன் வரவேற்புரை யாற்றினார். 'தமிழால் கூடுவோம்' என்னும் தலைப்பில் புலவர். திரு. நாவை-சிவம் இல.இ., 'தமிழினத் தால் கூடுவோம்' என்னும் தலைப்பில் திரு. சாமி தமிடன் க. இ., 'தமிழ்நாட்டில் கூடுவோம்' என்னும் தலைப்பில் திரு. இரா. பாவாணன் ஆகியோர் முறையே உரையாற்றினர்.

புதுவை மாநில உ. த.மு. க. அமைப்பாளர் வழக்கறிஞர் திரு. ப. அருளி அவர்கள் உ. த. மு. க. கொடியினை ஏற்றி வைத்து, உரையாற்றினார். தொடர்ந்து, தென்மொழி ந. முத்துக் குமரனாரும், நாகைத் தமிழ்க் கழக அமைச்சர் பாவலர் கோ. கோவை. இளஞ்சேரனாரும் உரை நிகழ்த்தினர்

கழக முதல்வர் பாவலரேறு ஐயா அவர்கள், தம் போன்றோர்க்குச் செய்த கடந்த கால உதவிகளையும், தொடர்ந்து அவர்கள் ஆற்றும் கடமைகளையும் நன்கு சுட்டி, தமிழீழ விடுதலைப்புலி திரு. நிரஞ்சன் (சிவனேசுவரன்) அவர்கள் நன்றியுரையாற்றினார்.

பின்னர், முதல்வர் பாவலரேறு ஐயா அவர்கள், இன்றைய அரசியலின் போலி நடைமுறைகளையும், தமிழினத்தின் இன்றைய வீழ்ச்சி நிலைகளையும், உ. த. மு. க.வின் தேவைகளையும் பலபடியாக நிரல்படக் காட்டி, கொள்கை விளக்கப் பேருரையாற்றினார், (சொற்பொழிவுச் சுருக்கம் முதல் இதழில் வெளிவந்துள்ளது.)

இறுதியில், மாவட்டப் பொருளர் திரு. ஈகவரசன் அவர்கள் தமிழின ஒருங்கிணைப்புப் பாடலைப் பாடி, நன்றியுரையும் நவின்றார். நிகழ்ச்சி இனிதே நிறைவெய்தியது.

## தமிழ் நாளிகை
### (தமிழ் நாள்காட்டி)

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு !

அழகிய எண்களுடன் தமிழ் மாதப் பக்கல்களும், தமிழ் நடைமுறை எண்களுடன் ஆங்கில மாதப் பக்கல்களும், ஒவ்வொரு மாதத் தாளிலும் தமிழ், தமிழின, தமிழ்நாட்டு முன்னேற்றத்திற்குரிய கொள்கை மொழிகளும் குறிக்கப் பெற்று வரும் திசம்பர் முதற் கிழமையிலேயே விற்பனைக்குக் கிடைக்கும்படி அழகிய படத்துடன் கூடிய இருவண்ண நாளிகை வெளி வருகிறது.

• விலை விளக்கம் பின்னர்,

தேவையானவர்கள் முன்கூட்டியே எழுதுக !

விற்பனையாளர்களுக்குத் தக்க கழிவு கொடுக்கப்பெறும்.

உ. த. மு. க. மே/பா தென்மொழி, சென்னை—5.

## குடியேற்றம், உலகத் தமிழின முன்னேற்றக் கழகத் தொடக்கவிழாவும் உலகக் குறளவை விழாவும்

வட ஆர்க்காடு மாவட்டம், குடியேற்றத் தில் நகராண்மைப் பள்ளி கிளைக் கட்டடத்தில், 2-10-82 காரிக் கிழமை மாலை 6-மணி அளவில், குடியேற்ற அ. தி. மு. க. அமைப்பாளர் திரு. மு. க. மெய்ஞானம் அவர்கள் தலைமையில், உலகத் தமிழின முன்னேற்றக் கழகத் தொடக்க விழாவும், உலகக் குறளவை விழாவும் ஒரு சேர நடத்தப் பெற்றன !

உ. த. மு. க. குடியேற்ற வட்டத் தலைவர் திரு. இரா. வெற்றி அழகன் க. மு. அவர்கள் அனைவரையும் வரவேற்று உரை நிகழ்த்தினார். தொடர்ந்து, திராவிடர் கழக நகரச் செயலர், திரு. அ. இரவி, தி. க. நகரத் தலைவர் திரு. அ. ஆ. தண்டபாணி, புலவர். கு. பிரசாத், தி.மு. க. வட்டத் தலைவர் திரு. அ. கோபால், திரு. தமிழ்மணி, உலகக் குறளவைத் தலைவர் திரு. இராமநாதன், வாணியம்பாடி. உ. த. மு. க. வட்டத் தலைவர் புலவர் தங்கவேலனார், அரசு மருத்துவர் திரு. வி. பி. நாகராசன் ஆகியோர் உரைமாரி பொழிந்தனர்.

அனைத்து அறிஞர்களும் உரையாற்றிய பின்னர், உ. த. மு. க.வின் முதல்வர் பாவலரேறு ஐயா அவர்கள், கொள்கை விளக்கப் பேருரை ஆற்றினார். (சொற்பொழிவுச் சுருக்கம் பின்னர் வெளிவரும்). ஐயா அவர்கள் ஆற்றிய மூன்று மணிநேரச் சிறப்புரை, குடியேற்றம் பகுதியில் நல்ல விளைவை உருவாக்கியுள்ளது.

இறுதியில் குறளவைத் தலைவர் திரு. இராம நாதன் அவர்கள் நன்றி கூறினார்! விழா இனிதே நிறைவெய்தியது !

அன்பர்களுக்கோர் நல்வாய்ப்பு:
அனைவரும் தவறாமல் பங்கு பெறுக!

## பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் திருக்குறள் தொடர் சொற்பொழிவு

சென்ற ஆண்டு சேலம் மாவட்டம், கோனேரிப் பட்டியில் நடைபெறுவதாயிருந்து, இடையில், 'பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் மறு எர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டு சிறை சென்றமையால் நின்று போன திருக்குறள் தொடர் சொற் பொழிவு, அடுத்து வரும் திசம்பர் 24-ஆம் பக்கல் தொடங்கி, 1983 சனவரி 2-ஆம் பக்கல் வரை. 10 நாட்கள் பெரியார் வட்டம் பவானி யில் பாவேந்தர் இலக்கியப் பேரவை சார்பாக நடைபெற இருக்கிறது என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன். விரிவான அறிக்கை. பின்னர் வெளியிடப் பெறும்.

முன்கூட்டியே விளக்கம் வேண்டுவோர் தொடர்பு கொள்ளவும்.

காவேரி மின்நகர் — அமைப்பாளர்
குதிரைக்கல்மேடு (அஞ்) — தென்மொழி
பவானி (வழி) — நா. இளமாறன்
639302 — இளம்பொறியாளர்

## திருப்பூர் நகர உ. த. மு. க. கிளைத் தொடக்க விழா

திருவள்ளுவர் ஆண்டு 2013, துலை (ஐப்பசி) 5-ஆம் நாள் 22-10-82 வெள்ளி மாலை 6-மணி அளவில், திருப்பூர் நகரத்தின் உ. த. மு. க. கிளைத் தொடக்க விழா, திருப்பூர் நகர் மன்றத் திடலில் மிகச் சிறப்பாக நடந்தேறியது. தென்மொழி ப. துரையரசன் க.இ. அவர்கள் தலைமை தாங்கி உரையாற்றினார். திரு. நீறணி பவளக் குன்றன் அனைவரையும் வரவேற்று உரை நிகழ்த்தினார். உ. த. மு. க. மாவட்டப் பொருளர் திரு. மா. ஆறுமுகம் அவர்கள், இயக்கக் கொடியை ஏற்றி வைத்து உரையாற்றினார். உ.த.மு.க. கொடி நீண்டுயர்ந்த கொடிக்கம்பத்தில் நிலையாகப் பறந்து கொண்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

பின்னர், திருப்பூர் அரசு கல்லூரி மாணவர் திரு. ஞா. அரசமெய்யறிவன் (க. இ.), தென்மொழி க. தமிழப்பன், உழவர் உழைப்பாளர் கழக மாவட்டத் தலைவர் திரு. என். எசு. பழனிச்சாமி க. மு., திராவிடர் கழக தொழிலாளர் இயக்க மாவட்டச் செயலர் திரு. இரா. சுந்தரராசன், திரு. தி. நா. அறிவரசு அறி. இ., உ. த. மு. க. மாவட்டச் செயலர் திரு. இளஞ்சேரல் முதுபாண்டியன், உ. த. மு. க, தலைமைக் குழு உறுப்பினர் தென்மொழி ந.முத்துக்குமரன் அறி. இ., வழக்கறிஞர் திரு. கு. ச. ஆனந்தன் வணி. இ; ச. இ; ஆகியோர் அரிய கருத்துரைகளை அவையோர் முன் எடுத்து வைத்து உரை பொழிந்தனர்.

அறிஞர்களின் கருத்துரைகளுக்குப் பின்னர் இறுதிச் சிறப்பு நிகழ்ச்சியாக, உ. த. மு. க. முதல்வர் பாவலரேறு ஐயா அவர்களின் கொள்கை விளக்கச் சிறப்புரை நிகழ்ந்தது. தமிழ், இனம், நாடு ஆகியவற்றின் மீட்சிக்கான தேவைகளும், உ. த. மு. க. வின் தோற்றத்திற்கான இன்றியமையாமையையும் விளக்கி ஆற்றிய அரிய செந்தமிழுரை நல்ல விளைவையும் விழிப்பையும் அவ்வட்டாரத்தில் ஏற்படுத்தியது.

இறுதியில், திரு. மா. ஆ. மாசிலாமணி அவர்கள், நன்றியுரையாற்றினார். விழா இனிதே நிறைவெய்தியது.

## திட்டக்குடி வட்டம், - உலகத் தமிழின முன்னேற்றக் கழக தொடக்க விழா :

திட்டக்குடி வட்டத்தின் உ. த. மு. க. கிளைத் தொடக்கவிழா, பெண்ணாகடம், மொழி ஞாயிறு பாவாணர் அரங்கில் (பழைய திரை அரங்கம்) 24-10-82. ஞாயிறு அன்று மாலை 3 மணி அளவில், திட்டக்குடி வட்ட உ.த.மு.க. தலைவர் புலவர் திரு. துரை. காசிநாதன் அவர்கள் தலைமையில் நிகழ்ந்தது: கல்லக்குறிச்சி வட்ட உ. த. மு. க. தலைவர் திரு. க. நெடுவேல் சேரன் அவர்கள் தமிழ் வாழ்த்துப் பாடினார்.

(6-ஆம் பக்கம்பார்க்க)

## "தென் மொழி"

சென்னை—5.

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ் ஒவ்வொரு தமிழ்த் திங்களும் முதல் நாளன்று வெளிவரும்

| | உள்நாடு | கொழும்பு | வெளிநாடு |
|---|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் | 15 உருபா | 35 உருபா | 35 உருபா |
| அரையாண்டுக் கட்டணம் | 8 உருபா | 18 உருபா | 18 உருபா |
| தனியிதழ் | 1.25 உருபா | 3 உருபா | 3 உருபா |

ஒரிதழுக்கு உருபா 2.50 மேனி முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க.

அமைச்சர் 'தென் மொழி' சென்னை—5.


சிங்கப்பூர்ச் செய்திக் கதிர்

# ஆசியன் நாடுகளின் இலக்கிய விருதும் - விருந்தும் !

சிங்கப்பூர், மலேசியா, இந்தோனேசியா, தாய்லாந்து, பிலிப்பைன்சு நாடுகளின் ஒருங்கிணைப்பான 'ஆசியன்' கூட்டமைப்பு, அவ்வைந்து நாடுகளின் இலக்கிய வளர்ச்சியைக் கருத்திற் கொண்டு, முன்னணி எழுத்தாளர் ஐவருக்கு இலக்கிய விருதளித்துச் சிறப்பித்தது. உலகின் புகழ்வாய்ந்த எழுத்தாளர்களின் முன்னிலையில் நடந்த அப்பெருவிழாவைத் தாய்லாந்து இளவரசி மகா சக்ரி சிந்தோன் தலைமையேற்றுச் சிறப்பித்தார்.

மலேசியாவின் உசுமான் அவாங், பிலிப்பைன்சின் கிறித்தபால், இந்தோனிசியாவின் மரியன்னி கதோப்போ, தாய்லாந்தின் சார்ட் கோப்சிட்டி ஆகியோருடன் சிங்கப்பூர் மா. இளங்கண்ணனும் சிறப்பு விருதும் பரிசும் அளிக்கப் பெற்றுப் பாராட்டப் பெற்றனர்.

திரு. மா. இளங்கண்ணன் தனித்தமிழ் எழுத்தாளரும், சிங்கப்பூர்த் தமிழ் எழுத்தாளரும், சிங்கப்பூர்த் தமிழ் எழுத்தாளர் கழகத்தில் ஓர் உறுப்பினரும் ஆவார்.

திரு. மா. இளங்கண்ணன் வழி பிறந்தது, குங்குமக்கனத்தில், அலைகள் (ஆனந்த விகடன் பரிசு பெற்றது) கோடுகள் ஓவியங்களாகின்றன முதலிய நூல்களின் ஆசிரியரும் ஆவார். சிங்கப்பூர்த் தமிழ் எழுத்தாளர் கழகத்தின் மற்றோர் உறுப்பினர் திரு. இராம. கண்ணபிரான் அவர்கள், சிங்கப்பூர்த் தேசியப் பொத்தக மேம்பாட்டுக்கழகப் பரிசை அண்மையில் பெற்றுள்ளார். இவர், இருபத்தைந்து ஆண்டுகள், உமாவுக்காக, வாடைக் காற்று, சோழன் பொம்மை முதலிய நூல்களை வெளியிட்டுள்ளார்.

மேற்கண்ட இருவருக்கும், சிங்கப்பூர் தமிழ் எழுத்தாளர் கழகம் கடந்த 24-10-82 ஆம் நாள் சிறப்பு விருந்தளித்துப் பாராட்டிப் பரிசளித்தது.

சி. த. எ. க. தலைவர் பாவலர் முல்லைவாணன் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இச் சிறப்பு நிகழ்ச்சி, பாவலர் முத்துமாணிக்கத்தின் தமிழ் வாழ்த்துப் பாடலுடன் தொடங்கியது.

பொன். சுந்தரராசு அவர்களின் வரவேற்புரைக்குப் பின், பாவலர் முல்லை வாணன் தலைமையுரை ஆற்றினார்.

பாவலர் முத்தமிழன், பாவலர் பரணன் ஆகியோர் வாழ்த்துப்பா பாடியளித்தனர்.

சிங்கப்பூர் ஒலிபரப்புக் கழகத் தலைவர் (ஒலிவழி நான்கு) திரு. எம். கே. நாராயணன், பாவலர் அ. அமலதாசன் ஆகியோர் பாராட்டுரை வழங்கிய இவ்விழாவில், சிங்கப்பூர் நாடாளுமன்ற உறுப்பினர் மாண்பமை எம். கே. ஏ. சபார் அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்கள்.

தமிழ் முன்னோடியாக விளங்கும் திரு. சபார் அவர்கள், பரிசு பெற்ற எழுத்தாளர்களுக்கு மாலையணிவித்துச் சிறப்பித்ததுடன், தமிழர் சீர்திருத்தக் கழகத் தலைவர் தமிழ் நெறிக் காவலர் அ. விக்டர் அவர்கள் அளித்த பரிசினையும் வழங்கிச் சிறப்பித்தார்கள். பெரும்பாலான அறிஞர் பெருமக்களும் எழுத்தாளர்களும் கலந்துகொண்ட இவ்விழா, பரிசு பெற்ற எழுத்தாளர்களின் நன்றிபாராட்டும் உரையுடனும் திருவாட்டி சங்கரி இராமநுசம் அவர்களின் நன்றி கூறலுடனும் இனிது நிறைவெய்தியது.

—முல்லை.

---

## எழுத்தர்கள் தேவை !

தமிழ் நிலம் இதழ்ப் பணிகளை மேற்கொள்ள தகுதியும் திறமையுமுள்ள எழுத்தர்கள் தேவைப்படுகின்றார்கள். விரும்புவோர் தாம் எதிர்பார்க்கும் சம்பளத் தொகையையும், பிற விளக்கங்களையும் குறித்து, உடனடியாக "தமிழ் நிலம்" இதழ் எழுதுக.

—அமைச்சர்.

---

(5-ஆம் பக்கத் தொடர்ச்சி)

## உ.த.மு.க. செய்திகள்...

திட்டக்குடி வட்ட உ. த. மு. க. செயலர் புலவர் திரு. வே. தமிழ்நாவன் (வே. சண்முகம்) வரவேற்புரையாற்றினார். தெ. ஆ., தெற்கு மாவட்ட உ. த. மு. க. செயலர் திரு. செ. வ. புகழேந்தி தொடக்கவுரை நிகழ்த்தினார்,

விழாத் தலைவர் உரைக்குப் பின்னர், ஆசிரியர் திரு. பொன். இராமசாமி, பெண்ணாடம் புலவர் திரு. பாலுசாமி க.மு., திராவிடர் கழகம் திரு. இராமசாமி, அகரம் ஆசிரியர் திரு. இரத்தினம், பொதுவுடைமைக் கட்சி திரு. வள்ளுவன் ஆகியோரின் நெஞ்சுவந்த வாழ்த்துரைக்குப் பின்னர், திருமுதுகுன்றம் தமிழாசிரியர் திரு. ஐ. அரங்கநாதன் அவர்களின் தலைமையில் பாட்டரங்கம் தொடங்கியது.

"மதமே அறிவு வளர்ச்சிக்கு மாபெரும் தடை" என்னும் தலைப்பின் கீழ், திருமுதுகுன்றம் தமிழாசிரியர் திரு. வீர. தருமராசன் க. மு., கல்.இ. அவர்களும், "மொழியே நம் விழி" என்னும் தலைப்பின் கீழ் திரு. கீ. ந. அருட்பிரகாசம் இல.இ. அவர்களும், 'கலை படும் பாடு" என்னும் தலைப்பின் கீழ் திரு. சி. வரதராசன் அவர்களும் தாம் யாத்த பாடல்களை அவையோர்க்கு வழங்கி உணர்வும் மகிழ்வும் ஊட்டினர்.

பாட்டரங்கையடுத்து, கருத்தரங்கம் தொடங்கியது. 'மொழி இனக் குலைவு' என்னும் தலைப்பின்கீழ் திரு. துரைபாண்டியன் அவர்களும், 'கலையின் விளைவு' என்னும் தலைப்பின்கீழ் திரு. வே. நாகரத்தினம் அவர்களும் கருத்துரை வழங்கினர்.

பின்னர், 'மொழியால் உயர்ந்தவர்கள் மொழிமானம் காக்கத் தவறியவர்களே' என்னும் தலைப்பின்கீழ், வழக்காடு மன்ற நிகழ்ச்சி தொடங்கியது. இந்நிகழ்ச்சியில் வழக்கைத் தொடுப்போரும், மறுப்போரும் ஆக, திருமுதுகுன்றத்தின் திருவள்ளுவர்—இயற்றமிழ்க் கழகத்தினர் கலந்துகொண்டு சிறப்பித்தனர். வழக்குத் தொடுப்போராகப் பகுத்தறிவுப் பாவலர் திரு. ஐ. அரங்கநாதன் இல. இ, தங்கப்பாவலர் திரு. வீர. தருமராசன் க.மு., கல்.இ. ஆகியோரும் வழக்கை மறுப்போராகச் சிந்துப்பாவலர் திரு. டி. கே. சீனிவாசன் க.மு.,கல்.இ. ஆசுப்பாவலர் திரு. கீ. ந. அருட்பிரகாசன் இல். இ. ஆகியோரும் கலந்துகொண்டு திறமுற வழக்காடி அவையோர்க்கு விறுவிறுப்பு ஊட்டினர். அண்ணாமலைப் பல்கலைக்கழக முன்னாள் தமிழ்ப் பேராசிரியர் முதுபெரும் புலவர். திரு. அ. நடேசனார் அவர்கள் நடுவராக அமர்ந்து முடிவில் தீர்ப்புரை வழங்கினார்.

அடுத்து, தெ. ஆ. தெற்கு மாவட்டம் உ. த. மு. க. தலைவர் புலவர். திரு. தூக்கிய திருவடியார் உ. த. மு. க. கொடியேற்றி, உரையாற்றினார். திரு. ஐ. அரங்கநாதன் கொடிப் பாடலை உணர்வு மீதூரப் பாடினார். பின்னர், "சிந்தனையாளன்" இதழ் ஆசிரியர், திருமிகு. வே. ஆனைமுத்து அவர்கள், "பொதுவுடைமையும் நம் கடமையும்" என்னும் தலைப்பின் கீழ் கருத்துரையாற்றினார்.

முடிவில், உ. த. மு. க. முதல்வர் பாவலரேறு ஐயா அவர்கள் கொள்கை விளக்கப் பேருரையாற்றி விழாவில் கலந்து கொண்டோர் அனைவர்க்கும் சிந்தனையுணர்வையும் உள்ளத் தெளிவையும் மலர்த்தினார். திரு.வே. தமிழ்நாவன் நன்றியுரை செய்தார்.

## அண்ணனும் தம்பியும்

'அண்ணா'!

'என்ன தம்பி?'

'தஞ்சை என்பது தமிழ்நாட்டிலை உள்ள நகரம் தானே?'

'ஆமாம்'.

'அங்கு வாழும் மக்களும் தமிழர்கள் தாமே?'

'ஆமாம்'.

'அங்குள்ள ஒரு நூலகத்தில் பழைய சுவடிகள் திரட்டி வைக்கப் பட்டிருக்கின்றனவாமே, அந்த நூலகத்தின் பெயர் என்ன அண்ணா?'

'தஞ்சை சரசுவதி மகால் நூல் நிலையம்'.

'தமிழ்நாட்டில் தமிழர்கள் வாழும் நகரில் உள்ள நூல் நிலையத்தில் தமிழ்ச்சுவடிகள் மிகுதியாகவும், பிற மொழிச் சுவடிகள் குறைவாகவும் இருப்பது தானே அண்ணா முறை?'

'ஆமாம்'

ஆனால் அந்த நூலகத்தில் உள்ள தமிழ்ச் சுவடிகள் எத்தனை தெரியுமா?'

'சொல் தம்பி!'

'2081'.

'சமற்கிருதச் சுவடிகள் எத்தனை தெரியுமா?'

'அதைவிடக் குறைவாகத் தான் இருக்கும்!'

'அதுதான் இல்லை. தமிழ்ச் சுவடிகளைப் போல் சமற்கிருதச் சுவடிகள் பதினைந்து மடங்கு ஆகும். அஃதாவது—30,377. இது மிகப் பெரிய கொடுமை அல்லவா அண்ணா?'

'எனக்குத் தெரியாது தம்பி!'

- தமிழவேள்.

மாவட்டப் பொருளர் இறையூர் புலவர் இரா. தமிழ்வேந்தன் எழில், திட்டக்குடி வட்டத் தலைவர் புலவர் திரு. பாலுசாமி க. மு., திராவிட கழக இளைஞர் அணியைச் சேர்ந்த திரு. வந்தியத்தேவன் ஆகியோரும், வட்டப் பொறுப்பாளர்களும் உடனிருந்து நன்கு ஒத்துழைப்பு நல்கியமை மிகவும் பாராட்டவும் போற்றவும் தகுந்ததாகும்.

கழக முதல்வர் தங்குவதற்கும், உணவுக்கும் ஏற்பாடுகள் செய்திருந்த அருணா சர்க்கரை ஆலை மேலாளர் அவர்கள் நன்றிக்கும் பாராட்டுதலுக்கும் உரியவராவர். கழக முதல்வருடன் திருப்பூர், தென்மொழி க. தமிழப்பன் அவர்களும் விழா அமைப்பு நிகழ்ச்சிகளில்பங்கேற்றதும், மறுநாள் காலை, அவ்வட்டார அன்பர்களின் கலந்துரையாடல் பாவலரேறு அவர்களின் தலைமையில் நடந்ததும் குறிப்பிடத் தகுந்த நிகழ்ச்சிகளாகும்.

---

## உ. த. மு. க. விரிவடைகிறது

(3-ஆம் பக்கத் தொடர்ச்சி)

[2] சைதாப்பேட்டை வட்டம் ;
செயலர் : கு. மலரவன் (கு. சாக்கேதராமன்) சைதாப்பேட்டை. (தலைவர் முன்னமே அமர்த்தப் பெற்றுள்ளார் ; பொருளர் ஆய்வில்)

(உ) வடசென்னை மாவட்டம் :

மாவட்ட அமைப்பாளர் : தென்மொழி. ப. முருகவேள், சென்னை-5. மாவட்டச் செயலர் : புலவர் ஏ சண்முகம், சைதாப் பேட்டை, மாவட்டப் பொருளர்: துரை. தென்னவன், திருவொற்றியூர்.
(பொறுப்பு அமர்த்த அறிக்கை எண் 1-இல் சைதாப்பேட்டை வட்டச் செயலராக அமர்த்தப் பெற்ற தென்மொழி ப. முருகவேள் அமர்த்தம் தவிர்க்கப் பட்டது. சைதை வட்டப் பொருளர் கு. மலரவன், சைதாப்பேட்டை வட்டச் செயலராகப் பொறுப்பு மாற்றி அமர்த்தப் பெற்றார் )

[1] பெரம்பூர் வட்டம் :

தலைவர்: கா. செல்வஅரசன் க. மு. (குமுகாயம்)க.மு. (தமிழ்) க. மு. (கல்வெட்டு தொல்லியல்) அறி. இ., சென்னை-12

[ஊ] செங்கழுநீர்ப்பட்டு மாவட்டம் :

மாவட்ட அமைப்பாளர் புலவர். சித்திரப் பூந்துறையன் (சி. வெ. சுந்தரம்) செந்தாதிரிப்பேட்டை.

## காவிரி நீர்ச் சிக்கலைப்பற்றி...

காவிரி நீர்ச் சிக்கலுக்குத் தீர்வு காணப் பொதுத் தீர்ப்பாணையம் (டிரிபியூனல்) அமைக்கப்பட வேண்டும் அதுவரை இடைக்கால ஏற்பாடாக ஆற்று நீர்க்கழகம் அமைத்து 1924-ஆம் ஆண்டின் உடன்படிக்கைப்படி தமிழகத்திற்குச் சேர வேண்டிய நீரை நடுவண் அரசு ஒதுக்கீடு செய்ய வேண்டும்; காவிரி நீர்ச் சிக்கலால் தமிழகத்திற்கு ஏற்பட்டுள்ள இழப்பு — விளைச்சலால் 50 கோடி உருபாயும், மேட்டூர் மின்னுக்கத்தால் 10 கோடி உருபாயும் ஆகும். இந்த இழப்பை நடுவண் அரசே தமிழகத்திற்குத் தர வேண்டும் ... நடுவண் அரசின் ஆணை, திட்டக்குழுவின் எதிர்ப்பு இவற்றைப் பொருட்படுத்தாது மேலும் அணைத் திட்டங்களைக் கருநாடக அரசு செயல்படுத்துவதை நிறுத்துமாறு நடுவண் அரசு கண்டிப்பான கட்டளை பிறப்பிக்க வேண்டும். கிருட்டிணராசசாகர் அணைக்கும், மேட்டூர் அணைக்கும் இடையே மேகதாட் அணையை உலக வைப்பகக் கடனுதவியுடன் கருநாடகம் கட்ட இருப்பதை நடுவண் அரசு தடுத்து நிறுத்த வேண்டும். நடுவண் அரசு இவற்றை ஏற்றுச் செயல்பட மறுத்தால் அங்கு அமைச்சர்களாய் உள்ள ஆர். வெங்கட்ராமன், ஆர். வி. சாமிநாதன் ஆகியோரும், இ. பேராயக்கட்சிப் பொதுச் செயலாளரான கருப்பைய(மூப்ப)னாரும் தம் பதவிகளை உதறித் தள்ளி நடுவண் அரசு உணருமாறு நடவடிக்கையில் இறங்க வேண்டும். கருநாடக முதலவரின் போக்கே, இந்திய ஒற்றுமைக்கு எதிராயுள்ளது

—தமிழ்நாடு காமராசர் பேராயக் கட்சித் தலைவர்

**ப. நெடுமாறன்**

(மதுரையில் செய்தியாளர் கூட்டத்தில் கூறியது)

அடிப்படை: தினமணி 18-10-82

• • •

## கண்டுகொள்வோம் இந்தியாவை

மக்களாட்சி நடப்பதாகக் கூறப்பெறும் இந்தியாவில் மக்கள் படுகொலைகள் மட்டும் குறைவின்றி நடந்து வருகின்றன. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசே இதனை முன்னின்று செய்து வருவதுதான் கவனிக்கப்பட வேண்டியது. ''சட்டம் ஒழுங்கு பேணப்படுவதற்காக'' என்ற பெயரில் இது தொடர்ந்து நடத்தப்படுகிறது. இந்தியப் பாராளுமன்ற மக்களவையில் கடந்த அக்டோபர் 16-இல் தெரிவிக்கப்பட்ட (அரசுத்தரப்பின்) செய்தி வெளியீட்டின் படி, 1980-இல் மட்டும் 751 துமுக்கிச் சூடுகள் நடந்துள்ளன. 337 பேர் உயிரிழந்துள்ளனர். இவற்றுள் 248 துமுக்கிச் சூடுகள் மேற்கு வங்கத்தில் மட்டும் நிகழ்ந்துள்ளன. இவற்றில் 62 பேர் மாண்டு போயினர். தமிழ் நாட்டில் 20 துமுக்கிச் சூடுகள் நடந்ததில் 15 பேர் மாண்டனர். மற்ற மாநிலச் செய்திகளின் படி;

| | சூடு | சாவு |
|---|---|---|
| திரிபுரா | 87 | 12 |
| அசாம் | 29 | 36 |
| பீகார் | 55 | 30 |
| மகாராட்டியம் | 55 | 18 |
| குசராத்து | 40 | 24 |
| ஆந்திரம் | 38 | 23 |
| டில்லி | 9 | 1 |
| சம்மு காசுமீர் | 15 | 12 |
| கேரளம் | 8 | 4 |
| அரியானா | 11 | 3 |
| கருநாடகம் | 24 | 23 |
| உத்திரப்பிரதேசம் | 35 | 23 |
| மத்தியப்பிரதேசம் | 5 | 5 |
| இராசசுத்தான் | 4 | 4 |
| பஞ்சாபு | 4 | 1 |
| ஒரிசா | 22 | 6 |

500 பேர் செத்தால் ஐந்து பேர் என்று செய்தி வெளியிடும் அரசின் அறிக்கையே இப்படியென்றால் உண்மை நிலை என்னவோ?

— அடிப்படை: தினமணி (மதுரை) 18-10-82 : பக்கம்: 2

### அன்பர்கள் கவனிக்க...

கழக முதல்வர் அவர்களை வந்து காணவும், கண்டு பேசவும் விரும்பும் அன்பர்கள் கட்டாயம் காரி, ஞாயிறு ஆகிய நாள்களில் மாலை 5 மணிக்கு மேல் வருமாறு கேட்டுக் கொள்ளப் பெறுகிறார்கள்.

— அமைச்சர்

# தமிழின வீழ்ச்சி வரலாறும் மீட்சி முயற்சிகளும்

சொல்லாய்வறிஞர். ப. அருளி வணி. இ., ச. இ.

### முன்னுரை :

செந்தமிழ், பைந்தமிழ், நறுந்தமிழ், அருந்தமிழ், தீந்தமிழ், தண்டமிழ், ஒண்டமிழ், வண்டமிழ், நற்றமிழ் என்றவாறெல்லாம் பெருமையையும் அருமையையும் குறித்துத் தமிழைத் தமிழர்கள் போற்றியது அல்லது போற்றுவது போல, உலகத்தில் வேறு எந்த மொழிக்காரர்களும் தம் தம் மொழியைப் போற்றி இவ்வாறு அடை கொடுத்து நிறைக்கச் சிறப்பித்துக் கொண்டதாகத் தெரியவில்லை! அவ்வளவு பட்டங்களும் பாராட்டுதல்களும் தமிழர்களிடம் தமிழைப் பொறுத்த அளவில் உண்டு! பாராட்டினுர்கள் என்பதைவிட, ஒரளவுக்கு அதன் உண்மையை விளங்கிக் கொண்டு, அப்படி வழங்கி மகிழ்ந்தார்கள் என்பதே பொருந்துவதாகும்!

இயற்கையின் செம்போங்கான இயல் பொழுங்கின் படிநிலை வளர்ச்சியை, உலக இயற்கைப் பொருள்களில் தெரிந்துணர இயல்வது போலவே, தமிழ் மொழியின் அடியும் இடையும் முடிவும் இயற்கையாகவே மலர்ந்து மணப்பதை அறிவு கொண்டு அமைந்து நோக்கும் எவரும் உணர்ந்து தெளிந்து கொள்ள முடியும்! அவ்வளவு பசுமையான நிரல் ஒழுங்கும் ஒங்கலும் தாங்கிக் கமழ்கின்றது, இத தேனினும் இனிய தீந்தமிழ்!

உலக உருண்டையில் இதுவே முந்தித் தோன்றிய மொழி என்பதற்கு, இதன் ஒலியியல் தன்மையும் இயற்கைமையும், வலிவ்லான சான்று பகர்கின்றன! பிற எம் மொழியோடும் ஒப்பிடாமலேயே கூட, இதன் முன்மையையும் முதுமையையும், ஒருவர் தெளியத் தெரிந்து கொள்ளுகின்ற அளவுக்கு, இன்னும் இதன் அடிக்கட்டு அலைவுறுதும் குலைவுறுதும் நிலைக்க நிற்கின்றது!

தமிழின் மீமிகு முந்தியல் தன்மையே, அதை ஆக்கிய வழங்கிய அந்த மொழிக்குரிய மக்களின் முந்தியல் தோற்றவுண்மையையும் ஒருபுடை அணைத்து வைத்துக் கொண்டுள்ளது! மொழியின் முன்மை பற்றிய உண்மையில் உலகமாந்தவினத்தின் முந்தியல் தோற்றவுண்மையும் ஆழப் பதிந்துள்ளது என்பது கருத வேண்டிய ஓர் உண்மையாகும்!

தமிழ்ச் சொற்களின் பிறப்பு ஒவ்வொன்றனுள்ளும், முந்தைய தமிழ் மாந்தர்களின் அன்றைய வரலாறு அகமுகமாகச் செறிக்கப் பெற்றுக் கிடக்கின்றமையைக் காணலாம். பன்னூறு சொற்களுள், முந்தியல் தமிழ் மாந்தரின் உணர்வுகளும், பண்புகளும், வாழ்க்கை முறைகளும் ஊடாடுகின்றன! பழைய வரலாற்றுக் கணவரிசலுக்கு (Data) இன்றியமையாது பயன்படுகின்ற தொல் பொருளியல் சான்றுகள் (Archeological Evidences), நிலவியல் சான்றுகள் (Geological Evidences), கடலியல் சான்றுகள் (Oceanographic Evidences), வெட்டெழுத்துச் சான்றுகள் (Epigraphical Evidences) என்றவாறான சான்றுகள் எவற்றிலும் கண்டெடுக்க முடியாத அரும்பெரும் வரலாற்றுச் சான்றுகள் சொற்களின் ஒலியணுக்களுக்குள்ளே புதைவிட்டுக் கிடக்கின்றன!

தமிழ், மூல முதன்மொழியாதலால், அதன் சொற்களில் முந்தைய மாந்தனின் முனைப்பும் முயற்சியும் வாழ்க்கையும் ஒலியினுள் ஒளிபாகக் கிடக்கின்றன! பழைய மொழிகளின் வரிசையில் வைக்கப்பெறும் கிரேக்கம், இலத்தீனம், சமற்கிருதம் போன்றனவற்றுள், தமிழ் மொழியின் அழகிய மூலச் சொற்களின் சிதைவொலிகளே, பெரும்பான்மைவாகப் பரப்புண்டு சிதறக் கிடத்தலின், அவற்றிலும் தமிழமாந்தரின் பண்டைய வரலாறு சிதைவுண்ட நிலையில் புதையுண்டே கிடக்கின்றது! தமிழ வாழ்க்கை வரலாற்றின் எதிர்ஒளி, அவற்றிலும் கதிர்ச் சிதைவுற்றுள்ளது!

உலக முதன் மொழியாகிய செந்தமிழ்க்கு முதன்முதலில் ஏற்பட்ட பெயர் 'மொழி' என்பதே. பிற மொழிகள் கிளைத்துப் பல்கிய நிலையில், முந்திச் சிறந்து நீடிய தம் மொழியைக் குறிக்கத் **'தமிழ்'** என்னும் உரிமைக் கருவுணர்வு பொதிந்த சொல்லைத் தமிழர்கள் உருவாக்கியிருக்கின்றனர்.

உலக மொழிகளில் பெரும்பான்மையானவை தமிழ்மொழியின் உயிர் வலியையே உயிர்த்தவாறு வாழ்ந்து கொண்டிருக்கின்றன! உலகம் தெளியத் தெரிந்து உணர்ந்து கொள்ளாத, சிறக்கப் புறப்படுத்தப் பெறாத உண்மையாகவே இன்றும் இதன் நிலை உள்ளது. மலையாளம், கன்னடம், குடகு, துளு, தோடா, கோத்தம், கோரகம், (இவை தென் திரவிடம்), தெலுங்கு கோண்டி, கோயா, கூயி, கூவி, கோலாமி, பர்சி, கதபா, கொண்டா, நாய்க்கி, பெங்கோ, மண்டா (இவை நடுத்திரவிடம்), குருக், மால்தோ, பிராகூய் (இவை வட திரவிடம்) என்னும் இருபத்திரண்டு மொழிகளும் நேரிடையாகத் தமிழ்த் தாய்க்குப் பிறந்த பிள்ளை மொழிகளாகும்.

''திரவிட இனமொழிகள்'' (Dravidian Family of Languages) என்றவாறு, மூல வுண்மை அறியாது, தமிழையும் அதனுள் அடக்கியவாறு சொல்லப் பெற்று வருகின்றது! திரவிட மொழிகளில் ஒன்றாக மூலமொழியாகிய தமிழையும் ஆக்கி நிறுத்திய நிலையில், அதன் முன்மையை மறைக்கின்ற முகமைப் பயன் விளைவது நோக்கித் தமிழ்ப் பகைவர்களும் அந்தக் கருத்தையே மீள மீள நிலை சுட்டியவாறாகவும், இந்த இன மொழிகள் அனைத்திற்கும் மூலமொழியாக ஒரு முந்து திரவிட மொழியொன்று (Proto-Dravidian Language) இருந்து மறைந்து போயினதாகவும், தொடர்ந்து கதை பரப்பிக் கதைத்தவாறே களித்தும் எக்காளமிட்டும் வருகின்றனர்.

இன்றைக்கு இது பற்றிய நிலையில் தமிழர்க்கு இருக்கின்ற அறிவைவிட, ஆரியர்களுக்கு இருக்கின்ற தெளிவு பன்மடங்கு பாரியதாகும்! அதாவது, எது உண்மை என்பதில்!

இம்மேற்சுட்டிய இனமொழிகள் யாவினுக்கும் தாயாகிய தமிழின் பெயராலேயே **'தமிழிய மொழிகள்'** (Tamilian Languages) அல்லது **'தமிழியக் குடும்ப மொழிகள்'** (Tamilian Family of Languages) என்றவாறாகவே, திரவிட மொழிகள் என்ற பெயரால் இன்று வரையிலும் தவறாக அழைக்கப் பெற்று வரும் தமிழினின்று மூளைத்த இவ் வனைத்து மொழிகளும் அழைக்கப் பெறவும், சுட்டப் பெறவும், பயிலப்பெறவும், வழங்கப் பெறவும் வேண்டும்! இது, மிக மிக இன்றியமைதாததாகும்!

தமிழையும், அதன் இன மொழிகளையும் பிராமண அறிவாளிகள் சுட்டுவதற்குத் தெரிந்தெடுத்த பெயரே, புழங்கி வந்த பெயரே, 'திராவிட' என்பதாகும். இன்றைக்கு நமக்குக் கிடைக்கும் எழுத்துச் சான்றுகளில், கி. பி. ஏழாம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்த **''குமாரில - பட்டர்''** என்னும் பெரிய பிராமணரே முதன் முதலில் இச்சொல்லைக் கையாண்டதாகத் தெரிகின்றது!

பிராமணர் வாயில் நுழைய வியலாது அல்லது நுழைய விருப்பமில்லாது திணறியவாறு கோணிவிட்ட ''தமிழ்'' என்னும் கனினிய இனிய கனிச்சொல்லின் சிதைந்த படிவமான ''திராவிட'' என்பதையே, நாமும் மேலும் மேலும் அறியாது இறுகப் பிடித்தவாறு தொங்கி அலைவுறுவதும் உலைவுறுவதும் ஊசலுறுவதும் ஒருவகைப் பேதைமையின்பாற் பட்டதேயாகும்!

(தொடரும்...)

# ‘தமிழ் நிலம்’ இதழை வாழ்த்தி வரவேற்கும் நெஞ்சங்கள்!

### ஒல்லும் வகையால் துணை நிற்பேன்

இளைஞர்களின் போர்வாளாக, எழுச்சி முரசமாக விளங்கிச் சிறக்க, செழிக்க, தமிழ் நிலத்தை உவகையுடன் வரவேற்கிறேன். ஒல்லும் வகையால் துணை நிற்பேன்.

இவண்,
தங்கள் உண்மையுள்ள,
கடலூர் மணிமாறன், திருச்சி.

### வெல்லும் முயற்சிக்குத் துணை நிற்பேன்!

தென்மொழியில் நிலமும் (தென்) தமிழ் நிலத்தில் மொழியும் (தமிழ்) விரவி நிற்பதை எண்ணுந்தோறும் நனி இனிக்கிறது. இரண்டும் எம்மிரு கண்கள்! இவ்விரண்டின் வழி போகத்தான் எதிர்காலம் தொன்மைத் தமிழினத்தின் மீட்சியையும், எழுச்சியையும் காணத்துடித்துக் கொண்டிருக்கிறது. வெல்லும் முயற்சிக்குத் துணை நிற்பேன்!

—பி. அரசிறைவன், தஞ்சை.

### தகுதியுடையேனாய் இருப்பேன்

என்பால் தாங்கள் கொண்டுள்ள நம்பிக்கைக்குத் தகுதியுடையேனாய் எப்போதும் இருந்திடுவேன்.

—மு. பழ. சதாசிவம்,
சேலம்-5.

### ஆணையைச் செயல்படுத்துவேன்!

தங்கள் ஆணையைச் செயல்படுத்த என்றும் அணியமாக உள்ளேன்.

—ப. துரையரசன், திருப்பூர்.

### ‘தமிழ்நில’ வளர்ச்சிக்கு ஒத்துழைப்பேன்!

‘உலகத் தமிழின முன்னேற்றக் கழக’த்தின் கொள்கை முழக்க ஏடாக வெளிவரவிருக்கும் ‘தமிழ் நிலம்’ இதழ் வளர்ச்சிக்கு முழு ஒத்துழைப்பு நல்கிட உறுதி கூறுகின்றேன்.

—செ. கண்ணன்,
சென்னை-5.

### ‘தமிழ் நிலம்’ தமிழர்களின் நீண்ட நாள் கனவு!

உ. த. மு. க. என்ற பேரியக்கம் தொடங்கிய அதே நாளில் தமிழர்களின் நீண்ட நாள் கனவை நனவாக்க இருக்கும் ‘தமிழ் நிலம்’ வருவது கண்டு பேருவகை அடைகிறேன். இந்த நூற்றுண்டின் இறுதிக்குள்ளாவது தமிழர் தம் சொந்த நிலத்தில் வாழ வழி வகை செய்யும் என்று திண்ணமாக நம்புகிறேன். பாவேந்தன் பாடியது போல் ‘உதவாதினி ஒரு தாமதம் உடனே விழி தமிழா’’ என்று கூறி வரவேற்கிறேன்! தமிழ்நாடு தமிழருக்கே!

—மு. உலகநாதன்,
திருவண்ணாமலை.

### தக்கநேரத்தில் வெளியிட்டுள்ளீர்கள்

‘தமிழ் நிலம்’ கிழமை இதழ் நம் உ.த.மு.க. சார்பில் வெளிவருவது கண்டு மகிழ்ச்சி. பொது மக்களுடன் தொடர்பு கொள்வதற்கு ஒன்று பேச்சு; மற்றொன்று எழுத்து தேவைப்படுகிறது. தாங்கள் தக்கநேரத்தில் இந்த இதழை வெளியிட்டுள்ளீர்கள். ‘தமிழ்நிலம்’ இதழுக்கு என்னால் முடிந்தது செய்யக் காத்திருக்கிறேன்.

—தே. வே. சந்தானம்,
அரூர்,

### ‘தமிழ் நிலம்’ பயன் விளைக்கப் போகிறது

‘தமிழ் நிலம்’ என்னும் கிழமை இதழ் நம் இயக்கத்தின் போர்வாளாக வெளிவர விருப்பதை அறிந்து என் நெஞ்சாங்குலை பறந்து சென்று, வானை முத்தமிட்டு வான் நிலவைக் கொத்தி விட்டு, வாரியினுள் மூழ்கி மூழ்கி வட்டமிட்டுப் போர்ப் பரணி பாடியது. ஏர் பிடிக்கும் தமிழனுக்கும் கார்முகிலாய்க் கவின் மழையாய்த் ‘தமிழ் நிலம்’ பயன் விளைக்கப் போகிறது!

—தமிழ்வேந்தன்எழில்
இறையூர்

## சாதி ஒழிய வேண்டுமா? கலப்பு மணமே வேண்டும்!

[ஓர் அன்பர் மடல்]

பெருந்தகை ஐயா,
வணக்கம்.

தாங்கள் அமைத்திருக்கும் அமைப்பு (கழகம்), மேற்கொண்டிருக்கும் பணி எல்லாம் சிறந்தவையே! ஆயினும் நம்மிடையே பிரிவினைகளே மிகுதியாக வளர்கின்றன. ‘தமிழர்கள் எல்லாரும் ஒன்று’ என்ற உரை பேச்சு வடிவில் மட்டுமே நிலவி வருகிறது. ஆனால் செயல் வடிவில் இன்னும் வரவில்லை. தமிழர் என்பவர் யார்? என்ற வினாவிற்கு முடிவில்லை.

நமக்குள் ஓர் இலக்கம் சாதிகள் எண்ணிலடங்காப் பிரிவினை ஆற்றல்கள். இவை அறவே ஒழிக்கப்பட வேண்டும். இன்று ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் சாதியை நினைத்துப் பெருமைப்படுகிறார்கள்! மற்றொரு பக்கம் சாதியை தூண்டிவிட்டுக் கொண்டிருக்கிறான், குள்ள நரி. ஆகவே தமிழர் ஒன்றுபட ஒரே வழி நம் கழக அன்பர்களுள் கலப்பு-மணம் ஆதரிக்கப்பட வேண்டும். இது நம்மிடையே உறுதியாக்கப்பட வேண்டும். கலப்பு மணம் உறுதியாவதின் பயனாக, நம் குழந்தைகள் தமிழர் என்ற சாதியை இனத்தை உலகில் உறுதியாக ஊன்ற வேண்டும்.

தமிழர்க்குள், பழங்குடியினர். பிற்பட்டோர், பட்டியலில் இடம் பெற்றோர், முற்பட்டோர், கிறித்தவர், இசுலாமியர், தமிழர் மதத்தினர் (வேண்டுமாயின் தமிழ் இந்துக்களையும் தமிழராக மாற்றிச் சேர்த்துக் கொள்ளலாம்,) ஆகிய அனைத்துத் துறையினரும் கலப்புத் திருமணம் என்ற தொடரியால் இணைக்கப்பட்டுத் தூய தமிழர்களாக வேண்டும். சாதிப்பித்து நம் உள்ளத்திலிருந்து கொல்லப்பட வேண்டும். சாதியொழிப்பு, பேச்சளவில் அன்று; செயல் அளவில் கொண்டுவர வேண்டும்! இஃது உலகந்தழுவிய பணியாகச் செயல்பட வேண்டும். உலகத்தில் வாழும் அனைத்துத் தமிழர்களும் இதைப் பின்பற்ற வேண்டும் எந்த வழியிலும் அவரவர் சாதியில் தமிழர்கள் மணம் பண்ணிச் சாதிப்பேயை வளர்க்கக் கூடாது.

நம்மைப் பிரிக்கும் தீய ஆற்றல்கள் ஒழியட்டும். ஒன்றுபடுத்தும் ஆற்றல்கள் ஓங்கட்டும்.

இவண்
தமிழர் ஒற்றுமை நாடும்
அன்பன்
செ. முருகன், வைராகுடி,
கன்னியாகுமரி மா. வ.

★

### புதுமைத் தீ பொங்கிட வந்தது!

நல்ல தலைவனைப் பெற்றது ‘தமிழ் நிலம்’! நல்ல வேளையாய் வந்தது; ‘தமிழ் நிலம்’ கோணல் கொள்கையை நிமிர்த்தும் ‘தமிழ் நிலம்’ வள்ளுவர் தொல்லுரை கொணரும் ‘தமிழ் நிலம்’! வாழ்வார்க்குப் புதுமைத் தீ பொங்கிட வந்தது!

—புலவர். ச. சிவசங்கு
சிறுத்தண்டு நல்லூர்
(நெல்லை)

### இனமானம், மொழிமானம் காக்கட்டும்!

தொடங்கவிருக்கும் தமிழ் நிலம் விரைந்து செயலாற்றித் தமிழ் நிலத்தின் இனமானம், மொழிமானம் இவற்றைக் காக்கட்டும்!

—பாவலர் நிறைவாணன்
வேலூர்

### ஒல்லும் வகையெல்லாம் உறுபணி ஆற்றுவேன்!

‘தமிழ் நிலம்’ கிழமையிதழ் வெளிவரவிருப்பதறிந்துமகிழ்ந்தேன். ஒல்லும் வகையெல்லாம் உறுபணி ஆற்றுவேன். ஓயா துழைக்கும் தங்கட்கு உள்ள உறுதி போன்றே, உடல் உறுதியும் யும் என்ஞான்றும் வாய்ப்பதாக!

—புலவர் தூக்கிய திருவடி,
உளுந்தூர்ப்பேட்டை.

### பொறுப்புணர்ந்து செயல்படுவேன்!

இயன்றவரை பொறுப்புணர்ந்து செயல்படுவேன் என்று உறுதி கூறுகின்றேன்.

— கி. இளஞ்சேரல் முதுபாண்டியன், மின்பாறை.

### கலங்கரை விளக்கம்

‘தமிழ் நிலம்’ மலர்ந்ததைக் கேட்டதும் என் மனம் தனியுரம் பெற்றது; தனி மகிழ்வுற்றது; கமழ்மொழி நாட்டினம் கரைமுகம் காணக் கடல் முகத் தமைந்த கலங்கரை விளக்கம் ஆனது!

எமதிது எமதிது
என்றெல்லோரும்
ஏத்தி மகிழ்ந்திட
இதழாய் விரிந்தது!

— மணிமுத்து, பழனி.


## தென்மொழியின் தனித்தமிழ் வெளியீடுகள்.

பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின்

### புதுமுறை இலக்கியங்கள்

| | | |
|---|---|---|
| 1. | எண்சுவை எண்பது | (அச்சில்) |
| 2. | பாவியக்கொத்து (2 தொகுதிகள்) | (அச்சில்) |
| 3, | ஐயை (முதல் பகுதி) | 4—00 |
| 4. | ஐயை (இரண்டாம் பகுதி) | 5—50 |
| 5. | கொய்யாக்கனி (மறுபதிப்பு) | 9—50 |
| 6. | கற்பனை ஊற்று - கட்டுரைகள் 1, 2 | (அச்சில்) |
| 7. | பள்ளிப் பறவைகள் (2-ஆம் பகுதி) | 4—00 |
| 8. | பள்ளிப் பறவைகள் (2-ஆம் பகுதி) | (அச்சில்) |
| 9. | மகபுகுவஞ்சி (மறுபதிப்பு) | (அச்சில்) |
| 10. | கனிச்சாறு (முதல் தொகுதி) | 15—00 |
| 11. | கனிச்சாறு (இரண்டாம் தொகுதி) | 11—00 |
| 12. | கனிச்சாறு (மூன்றும் தொகுதி) | 17—50 |
| 13. | நூறாசிரியம் (முதல் பகுதி) | 2—50 |
| 14. | நூறாசிரியம் (இரண்டாம் பகுதி) | 3—00 |
| 15. | தன்னுணர்வு (மறுபதிப்பு) | (அச்சில்) |
| 16. | இளமை உணர்வுகள் | 1—25 |
| 17. | பாவேந்தர் பாரதிதாசன் | (அச்சில்) |
| 18. | இலக்கியத் துறையில் தமிழ் வளர்ச்சிக்குரிய ஆக்கப்பணிகள் | 1—25 |
| 19. | வாழ்வியல் முப்பது | 0—75 |
| 20. | ஆரியப் பார்ப்பனரின் அளவிறந்த கொட்டங்கள் | 2—25 |
| 21. | உலகியல் நூறு | 6—50 |
| 22. | அறுபருவத் திருக்கூத்து | (அச்சில்) |

### பிற வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| 1. | சிங்கள அமர்க்களம் (சொல்லாய்வறிஞர் ப. அருளி) | 5—00 |
| 2. | இந்திச் சிக்கலும் இறுதித் தீர்வும் (சிந்தனைச்செம்மல் கு. ச. ஆனந்தன்) | 1—50 |

பிற விளக்கங்களுக்கு:
தென்மொழி, சென்னை-5. தமிழகம்.


### உ. த. மு. க. வின் உயர்ந்த கொள்கைகள்:

- தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்.
- சாதியற்ற. மதவேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்.
- இழிவுகளும் பூசல்களும் ஏமாற்றும் இல்லாத அரசியல்.
- தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்.
- மனம், அறிவு, வாழ்க்கை -இவற்றை வளப்படுத்தவும் நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி.
- எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை.
- பழந்தமிழ் மரபுக்கும் மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்,


பதிவு எண். TN/ MS (C)\ 657 ஒவ்வொரு வெள்ளிக்கிழமையன்றும் வெளிவரும்.

அனுப்புதல்:
‘தமிழ் நிலம்’
5, அருணாசலத் தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை—5.

உறுப்பினர்.
ஆண்டு கட்டணம் ரூ. 36/-
அரையாண்டு கட்டணம் ரூ. 18/-

பெறுநர்.
நூல் அஞ்சல்
திரு / திருவாட்டி.

ஆசிரியரும், வெளியிடுபவரும்: பாவலரேறு பெருஞ்சித்திரனார், அச்சிடுவோர்: ‘தென்மொழி’ அச்சகம், சென்னை-5.